# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மார்ச் 2007 ஜீவியம் 12 மலர் 11

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம்* | 3 |
| *லைப் டிவைன்* | 16 |
| *சாதிக்க உதவும் ஆன்மா* | 22 |
| *யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்* | 25 |
| *அஜெண்டா* | 35 |
| *அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியது* | 37 |
| *யோக வாழ்க்கை விளக்கம் V* | 51 |
| *லைப் டிவைன் - கருத்து* | 55 |
| *அன்பர் கடிதம்* | 57 |
| *காணிக்கை* | 59 |


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

### ஜீவியத்தின் ஓசை

✡ **வீடுதோறும் தியான மையம்.**

✡ **வீதிதோறும் ஆன்ம விளக்கம்.**

✡ **நெஞ்சு தானே நிறைவது பக்தி ஆர்வமாக எழுவது.**

✡ **ஏழ்மையை எளிமைஎனக் கருதுவது தன்னையே ஏமாற்றிக்கொள்வதாகும்.**

✡ **அன்னையை அறிவது பாக்கியம், அதிர்ஷ்டம்; ஏற்பது அருள்.**

**இம்மாதச் செய்தி**

**அகமான ஆத்மா புறமான சத்தியம்.**

**பொய் சத்தியத்தின் எதிர்ப்புறம்.**

**பொய்யின் சத்தியம்**
**புறத்தை உட்கொண்ட அகம்.**



# உலகம்–மோட்சம்–ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

- முழுமையை முடிவாக அறிய வேண்டும் என்பதால் ஞானம், அஞ்ஞானம் என்ற விளக்கம் அதற்குச் சாதகமாக, பொருத்த– மாக இருப்பது அவசியம்.
- ஞானம் தன்னை அளவுக்குட்படுத்துவதால் அஞ்ஞானம் ஏற்படுகிறது என்பது பகவான் கூறியது. அளவு அகன்றால் அஞ்ஞானம், ஞானமாகிறது. ஞானம் என்ற முழுமையை நாமடைய முடியும்.
- வேதம், கடவுள், உலகம் என்று பிரித்து, கடவுளை அறிவது ஞானமாகவும், கடவுளை அறியாதது அஞ்ஞானமெனவும் கூறுகிறது. வேதவிசாரம் கடவுளில் ஆரம்பித்துக் கடவுளில் முடிவதால், உலகம் விலக்கப்படுகிறது. அதனால் முழுமைக்கு வழியில்லை.
- உபநிஷதம் கூறுவது வேறு:

> கடவுளை அறிவது வித்யா, உலகை அறிவது அவித்யா என்று உபநிஷதம் கூறுகிறது. கடவுளும், உலகமும் பிரிக்கப்படுகின்றன. அவை சந்திக்க வழியில்லை. அதனால் முழுமை எழ வழியில்லை.

- வேதம், உபநிஷதம், கீதை ஆகியவை மனம் என்ற கருவியைப் பயன்படுத்தின. மனம் பகுக்கும் கருவி. மனத்தால் முழுமையை அடைய முடியாது. அதனால் அவ்விளக்கங்கள் பூரண யோகத்திற்குப் பயன்படா.
- மேலும் சத்தியஜீவியம் ஞானம், மனம் அதை மறக்காதவரை ஞானத்தின் கருவியாகும். அதை மறந்தால் அஞ்ஞானத்தின் கருவியாகிறது. அம் மறதியின் நிலைகள் ஏழு. அவ்வேழுவகை அஞ்ஞானம் நாம் அறிய வேண்டியது. அஞ்ஞானத்தைப்

பூரணமாக அறிய நாம் ஞானத்தை, அதன் நான்கு வகைகளை அறிவது அவசியம்.

ஞானம் என்றால் இறைவனை உலகமாக அறிவது என்பது விளக்கம்.

1) இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலை ஞானம், உயர்ந்த நிலை ஞானம்.

2) அவனிடமிருந்து அகந்தையால் பிரிந்து நின்று தன்னை வேறாக அறிவது பிரிந்த நிலை ஞானம். இது கடைசி கட்டமான தாழ்ந்த நிலை.

3) இவற்றிடையேயுள்ளவை இரண்டு.

- ஒன்று intuition நேரடி ஞானம்.
- Subliminal அடிமனம் பெறும் பிரபஞ்ச ஞானம்.

நாமுள்ள அகந்தை நிலையிலிருந்து அடிமனத்தில் பிரபஞ்ச ஞானம் பெற்று, அங்கிருந்து உயர்ந்து நேரடி ஞானமடைந்து, முடிவாக இரண்டறக் கலந்த ஞானம் பெறுவது யோகம்.

## பூரணமான அஞ்ஞானம்

ஞானம் அஞ்ஞானமாக மாறும் நிலைகள் பல. அவற்றை ஏழு நிலைகளாகக் கூறுகிறோம். அஞ்ஞானம் பூரணமானால் சிருஷ்டி முடியும். பரிணாமம் ஆரம்பிக்கும். அது பூரணம்பெற, பரந்த பிரபஞ்சம் குறுகிய மனிதனாக வேண்டும். அடிமனம் மேல்மனமாகிறது. இம்மாற்றம் சிறப்பெய்த மேல்மனம் தலைகீழாக மாற வேண்டும். பரந்த அடிமனம் காலத்தாலும், மனத்தாலும் குறுகி, அகந்தையால் மேலும் சிறுத்து, சிறுமையின் முடிவு (கண்டம், infinitesimal) மேல்மனச் செயலானால் அஞ்ஞானம் பூர்த்தியாகும். சிருஷ்டியின் 8 நிலைகளில் ஒரு நிலையினின்று அடுத்த நிலைக்குவரத் தலைகீழ் மாற்றமுண்டு. இதை பகவான் reversal of consciousness தலைகீழாக மாறிய ஜீவியம் என்கிறார். இந்த மாற்றம் ஓர் அத்தியாயமாக விளக்கப்படுகிறது.



## குறை, தவறு, பொய், தீமை

**ERROR, MISTAKE, FALSEHOOD, WRONG, EVIL**

இரண்டாம் புத்தகம் முதற்பகுதியின் 14 அத்தியாயம் இத்துடன் முடிகின்றன. மேற்கூறியவை அஞ்ஞானத்தின் இருண்ட பகுதிகள், இருள் திரண்டு கருமை, கடுமையாவது தீமை. எளிமையான மாறுபாடு சிக்கலான குதர்க்கமாவது தீமை என்கிறார் பகவான். Simple contrary becoming complex perversity. இங்கு,

- சிருஷ்டியில் தீமை படைக்கப்படவில்லை.
- அகந்தை பிரபஞ்சத்திலிருந்து பிரிந்து தனித்து வேறுபட்டு உலகை வேறாகக் காண்பதால் நோய், வலி, கவலை, மரணம், தீமை உற்பத்தியாயின என்கிறார்.
- பிரிந்தது கூடினால் தீமை கரையும்,

என்பவை முக்கியக் கருத்துகள். தீமையைப் பற்றி அறிவு ஏற்கும் வகையில் கூறப்பட்ட ஒரே விளக்கம் இதுவே. உலகம் கேட்டறியாத விளக்கமிது. இந்த 14 அத்தியாயங்களில் ஞானம் எப்படி அஞ்ஞானத்தினின்று எழுகிறது, அஞ்ஞானம் எப்படி ஞானமாகிறது என்பது கூறப்படுகிறது. அடுத்து வரும் 14 அத்தியாயங்களில் ஞானம் பரிணாமத்தால் எப்படி ஆன்மாவாகிறது என்பது விளக்கப்படுகின்றது.

இரண்டாம் புத்தகம் இரண்டாம் பாகம்: ஞானம் ஆன்மீகப் பரிணாமத்தால் ஆத்மாவாகி வளர்வது, இப்பாகம். இதன் கட்டங்கள்,

- இதுவரை நாம் ஞானம் என்றது, அஞ்ஞானத்திற்கு எதிரான ஞானம். இது மனிதனுக்குரியது, மனத்திற்குரியது, காலத்துள், மேல்மனத்தில் செயல்படுவது. இப்பகுதியில் பேசப்படும் ஞானம் பூரண ஞானம் (integral knowledge). மனிதன் பெறும் ஞானம் பொருள்களைப் பற்றியது, நிகழ்ச்சிகளைப் பற்றியது. பகுதியானது. பூரண ஞானம் சத்தியத்தைப் பற்றியது (Reality). சத்தியம் என்பது எல்லா உலகங்களையும் தழுவியது. இதை அடிமனத்தால் பெறவேண்டும். நாம் அறிவை மனத்தால் பெறுவது போல், பூரண ஞானத்தை சத்தியஜீவியத்தால் பெற வேண்டும். நாம் கண் விழித்துப் பார்த்தால் கண்ணுக்கு எட்டிய

தூரம்வரைத் தெரிகிறது. பூரண ஞானத்தின் பார்வைக்குப் பிரபஞ்சம் முழுவதும் தெரியும். இது காலத்திற்கு உட்பட்ட– தன்று. முக்காலமும் தெரியும் ஞானமிது. முதல் அத்தியாயம் இஞ்ஞானத்தை பெறும் வகைகளைக் கூறி, இஞ்ஞானத்தின் எல்லா அம்சங்களையும் விவரிக்கிறது.

- இதைப் பெற முக்கிய நிபந்தனை அகந்தை கரைவது.
- இந்த ஞானத்திற்கும் நமது அறிவுக்கும் உள்ள வித்தியாசம் மனித அறிவுக்கும் விலங்கின் அறிவுக்கும் உள்ளது. நாம் இந்த உலகையறிவோம், ஊரை அறிவோம். நம் வீட்டு நாய்க்கும் அறிவுண்டு. அதுவும் இந்த ஊரை அறியும். இவற்றிடையேயுள்ள வித்தியாசம் நாமறிவது.

• நமது இலட்சியம் தெய்வீக வாழ்வென்பதால், இப்பூரண ஞானம் நம் வாழ்வில் வெளிப்பட வேண்டும். ஆதி மனிதன் உலகில் வாழ்ந்தான். நம் மனம் வளர்ந்து விஞ்ஞான அறிவு பெற்று, நகரத்தில் வாழ்கிறோம். ஆதி மனிதன் காட்டில் வாழ்ந்தான். அவன் வாழ்வு விலங்கின் வாழ்வு. அதிலிருந்து நாம் வளர்ந்து விட்டோம். அதே போன்ற மாற்றம் அடுத்த கட்டத்தில் வரும். இப்பூரண ஞானம் எந்த வாழ்வில் வெளிப்பட வேண்டும்? வாழ்வு என்றால் என்ன?

- புவி வாழ்வு ஒரு நிலை.
- பிரபஞ்ச வாழ்வு அடுத்தது.
- பிரபஞ்சத்தைக் கடந்த வாழ்வு அடுத்தது.
- இவையனைத்தும் இணைந்த வாழ்வும் உண்டு.

நாம் 4ஆம் வாழ்வை மேற்கொள்கிறோம். புவியும், பிரபஞ்சமும், அதைக் கடந்த நிலையில் உள்ள வாழ்வில் பூரணஞானம் வெளிப்பட்டு அது சிறக்க வேண்டும். அது அடுத்த அத்தியா– யம். துறவறம் வாழ்வை விலக்கியது. கிரகஸ்தன் புவிவாழ்வை மேற்கொண்டான். பூரணயோகி வாழ்வின் மூன்று நிலைகளை– யும் இணைத்து அதைப் பூரண ஞானம் மூலம் வாழ முடிவு செய்ததை விளக்கும் அத்தியாயம் இரண்டாம் அத்தியாயம்.



பாதாளமும், பரமாத்மாவும் ஐக்கியத்திற்காக இணைய வேண்டும். அடுத்த கட்டத்தில் ஆன்மா வளர இணைய வேண்டும். இணைந்தது உயர வேண்டும். உயர்ந்தால் ஆன்மா பரிணாமத்தால் வளரும். அந்த வளர்ச்சிக்கு 7 வகை அஞ்ஞானம் 7 வகை ஞானமாக வேண்டும். இந்த ஆன்மீக மாறுதல் மறுபிறப்புத் தேவையில்லாமல் செய்கிறது. உடல் பரிணாம வளர்ச்சி பெற்றால் மறுபிறப்புத் தேவையில்லை. ஆன்மா வளரும் பொழுது, அதற்கேற்ப மனமும், உயிரும், உடலும் ஆன்மீக வளர்ச்சி பெற்றால் மறுபிறப்புத் தேவையில்லை. அதுவே மனித இலட்சணம். அவனை பகவான் மனிதன் பிறந்தான் என்கிறார். அத்திறனை அடுத்தவர்க்கு அளிப்பவன் ஆன்மீக மனிதன். மனிதன் ஆன்மீக மனிதனான பின் திருவுருமாற வேண்டும். அத்திருவுருமாற்றம் 3 நிலை– களில் உள்ளது. சைத்தியத் திருவுருமாற்றம், ஆன்மீகத் திருவுருமாற்றம், சத்தியஜீவியத் திருவுருமாற்றம் என அவை மூன்றாகும். அதன் மூலம் சத்தியஜீவியத்தை எட்டலாம். அதனால் சத்தியஜீவன் பிறப்பான். அவன் வாழ்வு தெய்வீக வாழ்வு. இத்துடன் நூல் முடிகிறது. மேலும் முக்கிய விஷயங்கள், சிக்கலானவை, சிக்கலான சிறப்புடையவைஎன 50 முதல் 300 வரை ஏராளமானவையுண்டு. அவற்றுள் பலவற்றைக் காண்பது பலன் தரும்.

## தெய்வீக வாழ்வு

இது மனத்தை மையமாகயுடையதன்று. சத்தியஜீவியத்தை மையமாக உடையது. இதன் வாழ்வு பிரபஞ்சம் முழுவதும் பரவும். இதன் சக்தி என்றும் தோற்றதில்லை. இதைக் கடந்து எதுவுமில்லைஎன்ற முழுமையையுடையது. என்றும் ஆத்ம விழிப்புடையது. இதைத் திருவுருமாற்றத்தால் மட்டும் அடைய முடியும். திருவுருமாற்றம்பெற ஒரே கருவி சரணாகதி. அப்படிப்பட்ட தெய்வீக வாழ்வு,

• எளிமையாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை.

• எளிமையாகவோ, வளமாகவோ இருக்கலாம்.

- எப்படியுமிருக்கலாம் என்பது வழக்கமான பழக்கங்களிலிருந்து நாம் பெறும் சுதந்திரம்.
- Freedom is the final law and the last consummation.
- பூரணச் சுதந்திரமே முடிவான கட்டுப்பாட்டின் சட்டம்.

## அமர வாழ்வு

துறவிகளில் பலர் காயகல்பம் தேடினர். அவர்களில் பலர் பெரிய வைத்தியரானார். மரணமிலா வாழ்வு பெருவாழ்வு. அதைப் பெறும் நிலைகள் பல. வேத ரிஷிகள் அதை யோக லட்சியமாகக் கருதினர். அதை ஆத்மா அடைவது பேறு. அதன் இறுதி இலட்சியம் உடல் மரணத்தை வெல்வது. மருத்துவம் வலியை வென்றது. வாழ்வை நீட்டித்தது. மரணத்தை வெல்ல முயல்கிறது. ஆத்மா அழியும் உடலை விட்டு அடுத்த உடலை நாடி மறுபடியும் பிறக்கிறது. ஆத்மாவுக்கு அடுத்த பிறப்பற்ற நிலை உலகிலில்லை. பிரபஞ்சத்திலுண்டு. அதை Non-birth, Non-Becoming என்பார்கள். ஆத்மா அதனுலகில் பிறவியை வெல்லுதல் வேதம் நாடிய அமரவாழ்வு. ஆத்மா வளரும் பொழுது உடல் வளராவிட்டால் சிறுகுடும்பம் பெரிய குடும்பமாகும் பொழுது சிறுவீட்டை விட்டு பெரிய வீட்டுக்குப் போவதுபோல் ஆத்மா அடுத்த உடலை நாடுவது மறுபிறப்பு, புனர்ஜன்மம். குடும்பம் பெரியதாகும் பொழுது வீடும் பெரியதாக முடியுமானால் வீடு மாறவேண்டியதில்லை. பகவான் கூறும் அமர வாழ்வு அத்தகையது. அவ்வாழ்வு வந்தபின் மனிதன் பிறக்கிறான் என்று கூறுகிறார் (Evolution of Man).

## ONENESS IS DIFFERENT FROM ONE
## ஒன்று என்பது ஒருமையிலிருந்து வேறுபட்டது

நான் மனித குலத்தைச் சார்ந்தவன். மனிதர்கள் எத்தனை கோடியானாலும் நான் அவர்களுடன் ஒன்றிய மனிதன் என்பது மாறாது. ஒன்று என்பதும் ஒருமை என்பதும் வேறு வேறான கருத்து. இது ஒரு பேனா. அது ஒன்று. ஆயிரம் பேனாக்களுடன் இதுவும் ஒரு பேனா என்பது இதற்குப் பேனாஎன்ற அம்சமுண்டுஎனக் காட்டுகிறது. ஒருமையைத் தவறாக ஒன்றுஎனப் புரிவது குழப்பம் விளைவிக்கும்.



## கடவுள், சுதந்திரம், ஜோதி, அமரவாழ்வு

நூலின் முதல் அத்தியாயத்தில் முதற் பாராவில் மனிதன் தேடுவது கடவுள். அதை ஜோதியாகவும், சுதந்திரமாகவும், அமர வாழ்வாகவும் தேடுகிறான் (God, Light, Freedom, Immortality) என்கிறார். கடவுள்என்பது பிரம்மம். மனத்தில் அது ஜோதியாகவும், உடலின் ஆழத்தில் மரணமிலா வாழ்வாகவும், ஜீவனில் சுதந்திரமாகவும் காணப்படுகிறது. பூரணயோகம் எல்லாப் பகுதிகளிலும் கடவுளை நாடுகிறது. தவம் ஆன்மாவுக்கு மட்டும் விடுதலை மோட்சம் தேடுகிறது. இந்த இலட்சியத்தை ஆரம்பத்திலேயே பகவான் குறிப்பிடுகிறார்.

### மாயை

இது நாமறிந்த சொல். “மாயமாய் மறைந்து விட்டது” என்கிறோம். மாயம் என்றால் புரியாதது, மறைவது, இல்லாதது என்பது வழக்கு. மயன் என்பவன் தெய்வலோக சிற்பிஎன அறிவோம். இந்தச் சிற்பி கட்டுவது கட்டடமில்லை. பாண்டவர் இந்திரப்பிரஸ்தத்தில் மாளிகைகள் கட்டியது மயன். மயன் கட்டிய கட்டடம் உலகம், சொர்க்கம். இவன் பிரம்மாவின் சிற்பி. உலகை ஏற்படுத்தியது மாயை என்பதை பகவான்

- மாயை – தெய்வீக மாயை – பிரம்மத்தின் ஜீவியம் என்கிறார்.

உலகம் மாயை என்பதை சங்கரர் கருத்து மூலம் ஏற்கின்றனர். சங்கரர் மாயை என்பதை இல்லாதது என்று கூறுகிறார். பரமாத்மா சத்தியம், உள்ளது, நிலையானது. மற்றவையெல்லாம் ஜீவாத்மா உட்பட மாயை இல்லாதன. அதனால், இல்லாத மாயையை விட்டகன்று, இருக்கும் பரமாத்மாவை நாடுவது அத்துவைதம்.

பகவான் மாயை என்பதை பிரம்மத்தின் ஜீவியம் என்றார். இது இரு உலகங்களையும் சிருஷ்டித்தது என்றார். அவற்றை அஞ்ஞான மாயை, ஞான மாயை (higher and lower Maya) எனப் பிரித்தார். அஞ்ஞான மாயை ஜீவாத்மாவுக்கே அர்த்தமில்லை என்கிறது. அஞ்ஞான மாயையை ஏற்றுத் தழுவி, அதைக் கடந்து தெய்வீக மாயையை – higher Maya, ஞான மாயை – ஏற்க வேண்டும் என்கிறார். அஞ்ஞான மாயையும், தெய்வீக மாயையும் கருத்தில் சந்திக்குமிடத்தை நாம் அறிவது அவசியம் என்கிறார் பகவான். அது அஞ்ஞானம்,

ஞானமாகுமிடம். அஞ்ஞானமும், ஞானமும் சேர்ந்த முழுமை பூரண யோக அடிப்படை. அடிப்படையைக் கருதினால் அர்த்தம் அர்த்த–புஷ்டியாகும். சிருஷ்டியின் இரகஸ்யம் (key) தெரிந்து விட்டது. எந்தப் பூட்டில் இந்தச் சாவியைத் திறப்பது தெரியவில்லை என்கிறார். அந்த பூட்டு சிருஷ்டி. சிருஷ்டியின் முழுமையை அறிவது தெய்வீக மாயையும், அஞ்ஞான மாயையும் எண்ணத்தில் சந்திக்குமிடம். இக்கருத்து ‘தெய்வீக மாயை’ என்ற அத்தியாயத்தின் கரு, சூட்சுமம், இலட்சியம், இரகஸ்யம். இதன் வழி பகவான் சங்கரர் அத்துவைதத்தைக் கடந்து வருகிறார். புத்தரைக் கடந்து வந்த சங்கரரை பகவான் கடந்து வந்த வாயில்கள் அநேகம். அதனுள் முக்கியமானவற்றுள் இது ஒன்று.

## ஜீவியம், பிரகிருதி, இயற்கை, புறம், சலனம்

ஜீவன் செயல்பட ஜீவியம் உதவுகிறது.

புருஷன் பிரகிருதியால் செயல்படுகிறான்.

இறைவனின் கருவி இயற்கை.

அகம் புறமாக வெளிப்படுகிறது.

அமைதியின் செயல் சலனம்.

வாய் செயல்படுவது பேச்சு.

உடலின் அசைவு செயல்.

ஒரு நிலை அடுத்த நிலைக்குப் போகும் பொழுது அதன் பெயர் நிலைக்கேற்ப மாறுகிறது. பெயர் எதுவானாலும் கருத்து ஒன்றே. பிரம்மம் செயல்பட மாயை உதவுகிறது. மாயை பிரம்மம் செயல்பட உதவும் அடுத்த நிலைக் கருவி. இவை தத்துவம் பயன்படுத்தும் சொற்கள். எனவே மாயை என்றாலும் ஜீவியம் என்றாலும் ஒன்றேயாகும். அகம் புறமானதால் – பிரம்மம் செயல்பட முடிவு செய்ததால் – பிரம்மத்தின் அகம் பிரம்மம், அதன் புறம் சிருஷ்டி. சிருஷ்டிக்கு இரகஸ்யம் அகம், புறமாவது. அது பிரம்மம் எடுத்த முடிவு. பகவான் கூறுவது, பிரம்மம் வேறு, உலகம் வேறு, எப்படி உலகம் சிருஷ்டிக்கப்–பட்டதுஎனத் தெரியவில்லை என்பதன் முதற்பலன்,



- நம் வாழ்வு கர்மத்திற்கும், காலத்திற்கும் கட்டுப்பட்டது.
- நாம் பிரகிருதியை மட்டும் அறிந்து, புருஷனிலிருந்து எப்படி பிரகிருதி எழுந்ததுஎன அறியாவிட்டால் கடைசிக் கட்டமான சட்டம் கர்மம். அசையாத புருஷன், அசையும் பிரகிருதியாயிற்று என்று அறிந்தால், முடிவான சட்டம் ஜீவன். ஜீவனுக்குக் கர்ம மில்லை. காலம் ஜீவனைக் கட்டுப்படுத்தாது. உலகம் பிரகிருதியில் வாழ்வதை பகவான் ஜீவனுக்கு – புருஷனுக்கு – மாற அழைக்கிறார்.
- இதன் இரகஸ்ய சூட்சுமம் முழுமையிலுள்ளது. ஆபீசில் அதிகாரியின் சட்டத்திற்கு ஊழியர் கட்டுப்பட்டவர். 10 நிமிஷம் வெளியே போக உத்தரவு வேண்டும். அதிகாரிக்கு உத்தரவு தேவையில்லை. நாம் ஊழியராகவோ, அதிகாரியாகவோ இருக்கும் (choice) முடிவு நம்முடையது.

## கம்பனியில் சிருஷ்டி

இறைவன் என்பது அனந்தம், அனைத்தையும் தன்னுட் கொண்டவன், அவனன்றி அணுவும் அசையாது, உலகமே அவன், அவனைக் கடந்து எதுவுமில்லை, அவனில் இல்லாதது அவனியிலில்லை என நாம் கூறுகிறோம். இதை தத்துவமாக

- இறைவனை அனந்தம் (infinity) என்கிறார்.
- இறைவனை அனந்தம்எனக் கூறியவர் உலகிலுள்ள அனைத்தும், அணுவும், அனந்தம் என்கிறார்.
- அது உண்மையானால் அணுவினின்று அனந்தம் வெளிவரும். வாழ்வை இறைவனுக்கு ஏற்ப வாழ்ந்தால் நமக்கு ஏழ்மை, பஞ்சம், பற்றாக்குறையில்லைஎன ஆகும். இதை Practical concept of infinity, தொட்டனவெல்லாம் பொன்னாக வேண்டும் என்று அறியலாம். வாழ்வு சுபிட்சமாவது வாழ்வு தெய்வமாவது.
- இறைவனில் அனைத்தும் அனைத்துள் உள்ளது (all is in all). அதை மாயை சிருஷ்டியாக மாற்றுகிறது. இங்கு அனைத்தும் ஒன்றிலும், ஒன்று அனைத்துள்ளும் உள்ளன (all is in each, each is in all).

கம்பனியின் முதலாளி இறைவன். கம்பனி உலகம். கம்பனி–யெனில் பணம், சரக்கு, அதிகாரம், சட்டம், சம்பளம், போனஸ், இலாபம், நஷ்டம்எனப் பல உண்டு. அவ்வளவும் முதலாளியுள் உள்ளன. பணமே சரக்கு, சரக்கே இலாபம், இலாபமே நிர்வாகம்என அனைத்தும் அனைத்தில் உள்ளன. முதலாளி கம்பனியானபின் பணம்என்பது சரக்காகவும், சட்டமாகவும், ஒழுங்காகவும், உற்பத்தியாகவும் காணப்–படுகிறது. அதேபோல எதுவும் அனைத்துள் உள்ளது. அனைத்தும் இதனுள் காணப்படுகிறது சிருஷ்டியில் இதைச் செய்வது மாயை. கம்பனியில் இதைச் செய்வது முதலாளியின் செயல். அதை முதலாளியின் ஜீவியம் எனலாம்.

## புறம் அகமானால் யுகம் க்ஷணமாகும்

நாட்டில் ஒரு புதுச் சட்டம் ஏற்பட நாம் நினைத்தால், பலருக்கு அது நினைவாகவே இருக்கும். சிலருக்கு அதைச் செய்ய முடியும். எவ்வளவு நாளில் அது முடியும்என்பது அவர் யார்என்பதைப் பொருத்தது. சிறிய மனிதனுக்கு நெடுநாளாகும். பெரிய மனிதனுக்கு சீக்கிரம் முடியும். சிறிய மனிதன், பெரிய மனிதன், மக்கள் அனைவரும் புறம், சர்க்கார் அகம். பிரதமர் அகத்தின் மையம். வெளியிலுள்ள மனிதர் பிரதமரானால், எண்ணம் உடனே சட்டமாகும்.

## வாழ்வு மனத்தையும் உடலையும் இணைக்கும் லோகம்

உடல் உணரும் உணர்ச்சிகளை வாழ்வு மனத்திற்குக் கூறி அவ்வுணர்வுகளை எண்ணமாக மாற்றுகிறது. அந்த எண்ணத்திற்கு உடல் கட்டுப்படுகிறதுஎன்பது நம் அனுபவம். காற்று சில்லென வீசினால் உடல் குளிருகிறது. உடல் ஜடமாக இருந்தால், அது குளிரால் வாடும். என்ன செய்வதுஎன உடல் அறியாது. ஆடு அதுவும் செம்மறி ஆடு மடமைக்குப் பெயர் போனது. ஓர் ஆடு தவறி பள்ளத்தில் விழுந்தால், அதன் பின் எல்லா ஆடுகளும் பள்ளத்தில் விழும். என்ன செய்கிறோம் என அறியாமல், அறிய முடியாமல் செய்வது அறியாமை, மடமையாகும். நமக்கு மனம்என ஒன்றில்லையெனில், வாழ்வுமில்லா விட்டால், உடல் குளிரால் நடுங்கினால், என்ன செய்வதுஎன அறியாது. நடுங்கிக் கொண்டேயிருக்கும். உணர்ச்சிஎன்பது உயிருக்குடையது. நாம் அதை வாழ்வு என்கிறோம். காற்று சில்லென வீசினால் உணர்ச்சி அறிவுக்கு



அதை அறிவிக்கிறது. அறிவு அவ்வுணர்வை எண்ணமாக்கி, எழுந்து கதவைச் சாத்துஎன உத்தரவிடுகிறது. உயிர், வாழ்வு என்பதன் தன்மை,

- உடலையும், மனத்தையும் இணைப்பதாகும்.
- இணைப்பதன் மூலம் உடலை மனத்தின் அதிகாரத்துள் கொண்டு வருவதாகும்.

## காலம், இடம்

காலம், இடமில்லாமல் உலகமில்லை. நாம் சிந்தனையிலாழ்வது கற்பனை. இறைவன் கற்பனை செய்தால் அகத்தில் எழுவது காலம், புறத்தில் எழுவது இடம்.

- காலம் இறைவனின் கற்பனை.
- காலம் அகம், இடம் புறம்.

### SPIRITUAL RANGES OF MIND

## தெய்வீக மனம், ஆன்மீக மனம் என்பவை நான்கு நிலைகளில் அடுக்கடுக்காக அமைந்துள்ளன

- ஜடமான உடல், சக்திமயமான உயிர் (பிராணன்), அறிவின் உறைவிடமான மனம், மௌனமாய் சிந்திக்கும் முனிவர் மனம், ஞானதிருஷ்டியுள்ள ரிஷியின் மனம், நேரடி ஞானம்பெற்ற யோகியின் மனம், தெய்வங்கள் பெற்றுள்ள தெய்வீக மனம், சத்தியஜீவியம்பெற்ற சத்தியஜீவியம், ஜீவியம், ஜீவன், பிரம்மம் ஆகியவை மனித ஜீவனின் பகுதிகள். அது போக இருண்ட பாதாளம், அதைக் கடந்த ஜடமான இருள், நம்மைச் சூழ்ந்துள்ள சூழலின் ஜீவியம், நம் கரணங்களிடையே சூட்சுமமாக நிலவும் ஜீவியம் ஆகியவையும் நம் ஜீவனுக்குரிய பகுதிகள் (Parts of the Being). கை, கால், கண், மூக்கு, இதயம், ஈரல் போன்றவை உடலின் உறுப்புகள் (Parts of the body). அதேபோல் ஜீவன், மனித ஜீவனுக்கு இத்தனைப் பகுதிகள் உண்டு. அவற்றுள் மனத்திற்கும் சத்தியஜீவியத்திற்கும் இடையேயுள்ள நான்கு நிலைகளை ஆன்மீக மனம்என பகவான் பெயரிட்டழைக்கிறார்.

முனிவர் மனத்திலிருந்து சத்புருஷன்வரை உள்ள பகுதிகளை நாம் அறிய முடியவில்லை என்பதால் அவற்றை Superconscient பரமாத்மாஎனக் குறிப்பிடுகிறார்.

ஜீவியம் என்பது Consciousness. சிருஷ்டிக்குரிய முறைகள் மூன்று. அவை தன்னிச்சையாக சிந்திப்பது (Self-conception), தன்னைத் தானே அளவிட்டுக் கொள்வது (Self-limitation), தன்னைத் தன்னுள் கிரகிப்பது (Self-absorption) என்பவை. ஜீவியம் தன்னைத் தன்னுள் கிரகித்துக் கொண்டால் ஜீவியம் அறிய முடியாத நிலை ஏற்படுவதை Superconscient பரமாத்மா என்றநிலை எழுகிறது. எந்த நிலைக்கும் எதிரான நிலையுண்டு என்பதால் inconscient ஜட இருளும் ஏற்படுகிறது. ஜட இருளுக்கும் சக்தியுண்டு. அது அளவு கடந்த சக்தி. உலகம் அதனால் இயங்குகிறது. அது ஜடம், இருண்டது, ஆனால் சக்தியுடையது, இயங்க வல்லது. அந்த இயக்கமே பூவுலக வாழ்வு, மனித வாழ்வு. இங்கு ஆன்மீக மனம் என்ற 4 நிலைகளை மட்டும் விளக்குவோம்.

1) **முனிவர் மனம்** – இது நம் மனத்தைவிட ஏராளமான சக்தியுடையது. சிந்திக்காமல் புரியும் சக்தியுடையது. நம் மனம் அறிவால் செயல்படுவது. புலன்களால் நம் மனம் உலகையறியும். சிந்தனையால் புரிந்து கொள்ளும். இன்று உலகில் நாம் காணும் விஞ்ஞான விந்தைகளை எல்லாம் உற்பத்தி செய்தது நம் மனம், மனித மனம். முனிவர் மனம் மௌனம் காப்பது. பார்த்தவுடன் அறியும் பாங்குடையது. சிந்தனை அறிவின் கருவி. முனிவர் மனம் சிந்தனையற்ற மௌனமுடையது. Silent Will சக்தி வாய்ந்தது. அதன் உறைவிடம் முனிவர் மனம்.

- சிந்தனை அறிவின் ஊற்று.
- சிந்தனையற்ற மௌனம் பெரிய ஊற்று.

2) **ரிஷியின் மனம்**

மனிதச் சிந்தனையை முனிவர் கடந்து மௌனத்தில் உறைந்து பெரிய ஞானம் பெறுகிறார். ரிஷி மௌனத்தைக் கடந்து ஒளியை நாடி திருஷ்டி பெற்று, ஞானத்தை ஞானதிருஷ்டியாக அடைகிறார்.



3) **யோகியின் மனம்**

அறிவின் கருவிகள் பல. மனிதனுக்குச் சிந்தனை, முனிவர்க்கு மௌனம், ரிஷிக்கு ஜோதி. யோகிக்கு எந்தக் கருவியும் தேவையில்லை. அவர் ஞானத்தை நேரடியாகப் பெறுகிறார். அதை நேரடி ஞானம் intuition என்கிறார்.

4) **தெய்வீக மனம்**

மனிதனும், முனிவரும், ரிஷியும் கருவிகள் மூலம் ஞானத்தைப் பெறுகின்றனர். யோகி கருவியின்றி ஞானத்தைப் பெறுகின்றார். தெய்வத்திற்கு இவை எதுவும் தேவையில்லை. தெய்வீக மனம் ஞானத்தைப் பெறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஏற்கனவே அங்கு ஞானம் உள்ளது. ஆனால் ஞானம் மட்டுமன்று, அத்துடன் அஞ்ஞானமும் கலந்துள்ளது. அதற்குக் காரணம் தெய்வீகமனத்தில் அகந்தையுள்ளது. தெய்வீக மனமானாலும், அது மனம். இது சத்தியஜீவியமன்று. தெய்வங்கள் சிலசமயங்களில் நம்மைப்போல் வம்பில் மாட்டிக் கொண்டு தவிப்பதுண்டு. விஷ்ணு வந்து காப்பாற்றுவார். விஷ்ணு தெய்வீக மனத்தின் சிறப்பான உச்சகட்டம். இது சத்தியஜீவியப் பிரதிநிதி. இதற்கும் சத்தியஜீவியத்திற்கும் இடையே பொன்மூடி ஒன்றுண்டு.

கிருஷ்ணாவதாரம் இந்நிலைக்குரியது. பிரம்மா இந்த லோகத்தைச் சேர்ந்தவர். அதனால் பிரம்மா உலகை சிருஷ்டித்தார்எனில் மனம் உலகை சிருஷ்டித்ததுஎனப் பொருள். இதன் திறன் infinityயை finite ஆக்குவது. அகண்டத்தைக் கண்டமாக்குவது. அதைக் கடைசிவரை செய்வதால் ‘துச்சேன’ என்று கூறப்படும் (infinitesimal) அணுவரை தெய்வீக மனம் பொருள்களைப் பிரிக்கும்.

சத்தியஜீவியம் சத்திய லோகத்திற்குரியது. நம் லோகம் அசத்தியமான லோகம். தெய்வீகமனம் சத்தியஜீவியத்தின் பிரதிநிதியாக நம் லோகத்திற்கு வந்துள்ளது.

*தொடரும்....*

❀❀❀

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

This Supermind has a conscious force. Page No.135
It creates many forms of itself. Para No.7
The Supermind contains those forms.
The Supermind pervades those forms.
It changes itself into an indwelling Presence.
Also it becomes a self-revealing Light.
There are forms and forces in the universe.
The Supermind is present in those forms and forces.
But it is concealed.
It decides and determines sovereignly and spontaneously.
It so decides the form, force-functioning.
It compels a variation.
It limits these variations.
It uses the energy.
It gathers, dispenses and modifies that energy.
All this is done by the first laws.
The law is fixed by its self-knowledge.
It arises with the birth of the form.
It occurs at the starting-point of the force.



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

சத்தியஜீவியத்திற்குத் தெளிவான சக்தியுண்டு.
அது தன் பல ரூபங்களை சிருஷ்டிக்கிறது.
சத்தியஜீவியத்துள் அந்த ரூபங்களிருக்கின்றன.
இந்த ரூபங்களை சத்தியஜீவியம் ஊடுருவுகின்றது.
அதனுள் உள்ள ஆத்ம ஜோதியாக அது மாறுகிறது.
அது சுயம் பிரகாசமான ஜோதியாகும்.
உலகில் ரூபங்களும், சக்திகளும் உள்ளன.
அவற்றுள் சத்தியஜீவியம் உண்டு.
அது அங்கு மறைந்துள்ளது.
முழு அதிகாரத்துடன் உடனே அது முடிவு செய்கிறது.
ரூபம், சக்தி, செயல் அப்படி முடிவு செய்யப்படுகின்றன.
அவை மாற சத்தியஜீவியம் வற்புறுத்தும்.
அம்மாற்றங்களை சத்தியஜீவியம் அளவுக்குள் வைத்துள்ளது.
சக்தியை அது பயன்படுத்தும்.
அந்த சக்தியைச் சேகரம் செய்து, மாற்றி, செலவிடுகிறது.
அடிப்படைச் சட்டப்படி அவை இயங்குகின்றன.
சுயஞானம் இச்சட்டத்தை நிர்ணயிக்கும்.
ரூபம் பிறக்கும்பொழுது சட்டமும் பிறக்கிறது.
சக்தி ஆரம்பிக்கும் இடத்தில் சட்டம் பிறக்கிறது.

It is seated within everything.
It is the Lord in the heart of existence.
The Lord turns on them as on an engine.
It is done by the power of his Maya.
It is within them.
It embraces them as the divine seer.
He is variously disposed.
He ordained objects.
He ordained each rightly.
It is so done according to the thing it is.
This is done from years sempiternal.

There are animate things in Nature. Page No.136
There are others that are inanimate. Para No.8
Some are mutually conscious.
Others are not self-conscious.
Each of them is governed by a Power.
It is an indwelling Power.
They are governed in their being and operations.
That power is a Vision.
That power is subconscient to us.
Maybe it is inconscient also.
But it is not inconscient in itself.
It is profoundly conscient.
It is also universally conscient.
This power is the real-idea.
It is of the divine Supermind.
Each seems to do the works of intelligence.
But they do not possess intelligence.
It does so because it obeys the real-idea.



சத்தியஜீவியம் அனைத்துள்ளும் இருக்கிறது.
பிரபஞ்ச வாழ்வின் அம்சங்களின் இதயத்துள் ஈஸ்வரனாக அது அமைந்துள்ளது.
ஈஸ்வரன் அவற்றை ஒரு யந்திரம் செலுத்துவதுபோல் செலுத்துகிறான்.
இது மாயையால் நடக்கிறது.
இது அதனுள் இருக்கிறது.
தெய்வீக ரிஷியாக சத்தியஜீவியம் அவற்றைத் தழுவுகிறது.
அங்ஙனம் சத்தியஜீவியம் ஆயிரம் வழியாகச் செயல்படும்.
இறைவன் பொருள்களை நிர்ணயிக்கிறான்.
ஒவ்வொன்றையும் சரியாக நிர்ணயிக்கிறான்.
ஒவ்வொரு பொருளின் அம்சத்திற்கேற்ப அவை நிர்ணயிக்கப்படுகின்றன.
இது யுகாந்த காலமாக நடைபெறுகிறது.

உலகில் உயிருள்ளவை உண்டு.
உயிரற்றவையும் உண்டு.
சில அறிவுடையவை.
மற்றவற்றிற்கு அறிவில்லை.
ஒவ்வொன்றையும் ஒரு சக்தி ஆள்கிறது.
அச்சக்தி, அதனுள் உறைகிறது.
அதன் ஜீவனும், செயலும் அப்படி ஆளப்படுகின்றன.
அச்சக்தி திருஷ்டி.
அச்சக்தி நம் கண்ணுக்குத் தெரியாது.
அது நம் மனத்திற்கும் தெரியாது.
அது ஜடமன்று.
அது சக்திவாய்ந்த ஞானம்.
அது உலகையும் அறியும்.
அதன் பெயர் முழுஎண்ணம்.
அது தெய்வீக சத்தியஜீவியத்துடையது.
அது அறிவுடன் செயல்படுகிறது.
ஆனால் அதற்கு அறிவில்லை.
அது முழுஎண்ணத்தை ஏற்பதால் அறிவுடன் செயல்படுகிறது.

It is sub-conscious in the plant and the animal.
It is half-conscious in Man.
All things are informed and governed.
It is not a mental idea or intelligence.
It is a self-aware Truth of being.
Here self-knowledge is inseparable from self-existence.
This is Truth-consciousness.
It need not think out things.
It works them out with knowledge.
It has an impeccable self-vision.
It has an inevitable force.
It is a force of Self-Existence.
It is a sole force.
It is self-fulfilling.
Mental intelligence thinks out.
It is merely a reflecting force of consciousness.
It does not know.
But it seeks to know.
It follows step by step.
It does so in Time.
It follows the workings of a higher knowledge.
It is a knowledge that always exists.
It is one and whole.
It holds Time in its grasp.
It sees the past, present and future.
It does so in one grasp.

***Contd....***

❀❀❀



தாவரத்திலும், விலங்கிலும் அது புலன் அறியாமலிருக்கிறது.
மனிதன் அதை அரைகுறையாக அறிவான்.
பொருள்கள் ஆட்சி செய்யப்படுகின்றன. அவற்றிற்கு விபரம் கூறப்படுகிறது.
அது மனத்தின் அறிவில்லை.
அது தன்னையறியும் ஜீவனின் சத்தியம்.
இங்கு சுயஞானம் சுயப்பிரபஞ்ச வாழ்வுடன் கலந்துள்ளது.
இது சத்தியஜீவியம்.
இது சிந்திக்க வேண்டாம்.
இதன் வேலைக்கு அறிவுண்டு.
மாசுமறுவற்ற சுயதிருஷ்டியுடையது அது.
அதன் சக்தி தவிர்க்க முடியாதது.
சுயப்பிரபஞ்ச வாழ்வின் சக்தியது.
இது ஒரே சக்தி.
இது தன்னைத் தானே பூர்த்தி செய்யவல்லது.
மனத்தின் அறிவு சிந்தனையால் சிறக்கும்.
இது ஜீவியத்தைப் பிரதிபலிக்கும் சக்தி.
இது அறியாது.
இது அறிய முயல்கிறது.
படிப்படியாக இது தொடரும்.
காலத்தில் இது தொடர்கிறது.
ஓர் உயர்ந்த ஞானத்தின் தொழிற்பாடுகளை இது தொடர்கிறது.
இந்த ஞானம் என்றும் உளது.
இது முழுமையான ஒன்று.
காலத்தை இது தன்பிடியில் கொண்டுள்ளது.
கடந்தது, நிகழ்வது, வருவதை இது காணும்.
அவற்றை ஒரே பார்வையில் காணும்.

தொடரும்....

❀❀❀

# சாதிக்க உதவும் ஆன்மா

என். அசோகன்

புதிதாக வரும் டெக்னாலஜி எல்லாம் நம்முடைய செயல்திறனை உயர்த்தி நம் சாதனையை அதிகரிக்கின்றது. நம் சாதிக்கும் திறனைத் தொடர்ந்து உயர்த்திக் கொண்டுபோக வேண்டும்என்பது நம் வாழ்க்கையின் ஒரு குறிக்கோளாகவும் உள்ளது. நம் கல்வியின் நோக்கமும் அவ்வண்ணமே உள்ளது. செயலாற்றல் ஏறுமுகமாகவே இருக்க வேண்டும் என்பது மனிதனின் ஒரு முக்கிய குறிக்கோளாகும். ஆன்மீகரீதியாகவும் இத்தகைய குறிக்கோள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அப்படியெனில் இதைச் சாதிப்பது எப்படி?

ஆன்மீக சக்திஎன்பது நம்முடைய உணர்விலிருந்தோ அல்லது அறிவிலிருந்தோ எழும் சக்தியைவிட உயர்ந்தது. எண்ணெயால் எரியும் விளக்கைவிட மின்விளக்கு எப்படி உயர்ந்ததோ, அவ்வாறே ஆன்மீக சக்தியால் கிடைக்கும் பலன் உணர்வோ, அறிவோ வழங்கும் பலன்களை விட உயர்ந்ததாக இருக்கும். ஆன்மீகச் சூழல்என்பது அமைதியான முறையிலே அறிவுச் சூழலைவிட அதிகம் சாதிக்கும். ஒரு கம்பெனியில் மேற்பார்வையாளருக்குப்பதிலாக முதலாளியே நேரில் நின்று ஊழியர்களை வேலை வாங்கினால் எப்படியிருக்குமோ அப்படி ஆன்மீக சக்தி செயல்படும்பொழுது பலன் சிறப்பாகவிருக்கும். ஒருவர் புத்தகம் படிக்கும் பொழுது சாதாரண அறிவிற்குப்பதிலாக ஆன்மீக அறிவைப் பயன்படுத்தினால், அவருடைய புரிந்துகொள்ளும் ஆற்றல் பல மடங்கு உயர்ந்து, படிக்கும் வேகமும் அதிகரிக்கும்.

எந்தவொரு திறமைக்கும் இணையான ஆன்மீகத் திறமைகளுள்ளன. முதலாவதற்குப்பதிலாக இரண்டாவதைப் பயன்படுத்தினால் பலன் பல மடங்கு அதிகமாகவிருக்கும். ஒவ்வொரு தடவையும் நமக்குள்ள ஒரு



திறமையைப் பயன்படுத்தவேண்டிய நேரம் வரும்பொழுது வழக்கமான திறமையைக் கைவிட்டு ஆன்மீகத் திறமையை வெளிப்படுத்தவேண்டும். இந்த மாற்றத்தை நிகழ்த்த சுலபமான வழி அந்நேரம் அன்னையை நினைத்துக்கொள்வதுதான். மனநிலை சரியில்லாத ஒருவரால் தொந்தரவிற்கு ஆளான மற்றொருவர் இதிலிருந்து விடுபட வழி தெரியாமல் அன்னையிடம் முறையிட்டார். மீண்டும் இப்பிரச்சினை வரும்பொழுது தன்னை அழைக்கும்படி அன்னை அவரிடம் கூறினார். அவ்வாறு செய்த பொழுது உடனடி விடுதலை மனநோயாளியிடமிருந்து கிடைத்ததாக, மற்றவர் பின்பு அன்னையிடம் கூறினார்.

பிரச்சினைகள் எழும்போது அப்பிரச்சினைகளுக்குத் தம்முடைய ஆன்மீக சக்தியை அனுப்பும்படி அன்னை அன்பர்களிடம் கூறியுள்ளார். அன்னையின் அன்பரான பெண்மணி ஒருவருடைய கணவர் மாதந்தோறும் 20 நாள் வேலை சம்பந்தமாக வெளியூர் பிரயாணம் செல்ல வேண்டியிருந்தது. இதன் விளைவாக அப்பெண்மணிக்குப் பதற்றம் வந்தது. இந்நிலையில் தம் கணவர் செல்லவேண்டிய இடங்களுக்கு எல்லாம் அவர் போவதற்கு முன்னரே அன்னையை அப்பெண்மணி அனுப்பினார். இதன் பலனாக அவருடைய கவலை நீங்கியதோடன்றி அவருடைய கணவரின் வேலையும் நன்றாக நடந்தது. அன்னையின் திருவுருவத்தை நாம் கற்பனை செய்யும்பொழுது அதற்குள் எல்லாத் திறமைகளும் அடங்கிவிடுகின்றன.

ஒரு மணி நேரத்தில் 10 பக்கம் படிப்பவரையும், அதே நேரத்தில் 40 பக்கம் படிப்பவரையும் பார்க்கிறோம். வாசிப்பதுஎன்பது ஒரு திறமை ஆகும். பத்துப் பக்கத்தை இருபது அல்லது இருபத்தைந்தாக உயர்த்த முடியும். திறமைக்கு அடுத்த உயர்ந்த நிலையில் சாமர்த்தியம் உள்ளது. ஒரே வகைப் பொருள்களை விற்கின்ற இரண்டு கடைகளில், ஒன்றில் 2000 ரூபாய்க்கும், மற்றொன்றில் 15,000 ரூபாய்க்கும் விற்பதைப் பார்க்கின்றோம். ஒரேயொரு திறமைக்காக இவ்வளவு வித்தியாசம் வாராது. பல்வேறு திறமைகள் சம்பந்தப்பட்டிருப்பதால் இத்தகைய மாற்றம்

வருகிறது. இப்படிப் பல்வேறு திறமைகளை உள்ளடக்கிய திறனை சாமர்த்தியம் என்கிறோம். இப்படி சாமர்த்தியத்தைப் பயன்படுத்தும் பொழுது ஆயிரம் ரூபாய் விற்பனையை நம்மால் பதினைந்தாயிரத்திற்கு உயர்த்த முடியாவிட்டாலும் நாலைந்து ஆயிரத்திற்காவது உயர்த்தலாம்.

நிறைய விபரம் தெரிந்துகொள்வது சாதிப்பதற்கு உதவுகிறது. சிறந்த மனோபாவங்களும் நம் செயல்திறனை அதிகரிக்கின்றன. சாதனைக்கு பொறுமை மிக அவசியம். கர்மபலனை நம்பிச் செயலிழந்து நிற்காமல், பல வழிகளில் நம் சாதனையை உயர்த்திக்கொள்ளலாம். திறமை மற்றும் சாமர்த்தியத்தை உயர்த்திக்கொள்ளுதல், பொறுமை, கவனம் மற்றும் உழைப்பின் அளவை உயர்த்துதல், தகவல் மற்றும் விபரம் சேகரித்தல் ஆகியவை எல்லாம் செயலாற்றலை உயர்த்தும் வழிகளாகும். இவற்றை எல்லாம் செய்தபின்னர், அன்னையின் ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தும்பொழுது பலன் மேலும் பல மடங்கு உயரும். முதலில் திறமை, உழைப்பு, சாமர்த்தியம் ஆகியவற்றை உயர்த்திவிட்டு, பின்பு அன்னையைப் பயன்படுத்துவது உகந்த முறையாகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்தத் தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்கிறோமோ அது பலன் தருகிறது. மேலும் ஓர் உண்மையுண்டு. நாம் எந்நிலையில் நம் சக்திகளைச் சேர்த்து முறைப்படுத்துகிறோமோ அந்நிலையில் அம்முறைக்குத் தெய்வீக சக்தியுண்டு. அதுவும் பிரார்த்தனைக்குப் பலன் தரும். யார் பிரார்த்தனைக்குப் பதில் சொன்னார்கள் என்பது வேறுபடும்.

***முறைக்கும் சக்தியுண்டு.***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**20. எட்டு தலைகீழ் (reversal) மாற்றத்தை அறிவது.**

**தோல்வியே வெற்றி; வலி ஆனந்தம்; எதிரி ஏற்றமிகு நண்பன்; அநியாயம் ஆண்டவனின் நியாயம்; நடப்பவை இறைவன் செயல் என்றகருத்துகளை ஏற்பது.**

**21. துர்அதிர்ஷ்டம், பேராபத்து கொண்டுவருபவை வாய்ப்புஎன அறிந்து மகிழ்தல்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மேல்மனம் | கணவன் மனைவி பூசல்.<br>அன்பே வெறுப்பு. | முரண்பாடு உடன்பாடு. தடை வாய்ப்பாகும். |
| 2. | மேல்மனம் பொருள் | தோல்வி வெற்றிக்கு ஆரம்பம்.<br>நஷ்டமடையாமல் செல்வம் சம்பாதிக்க முடியாது.<br>டைபாய்டிலிருந்து பிழைத்து ஊனம் மாறும். | லிங்கன் மனைவி கணவனை துடைப்பத்தால் அடித்து விரட்டினாள். சாக்ரடீஸ் மனைவி மலம் நிறைந்த பானையைத் தலையில் போட்டு உடைத்தாள். |
| 3. | உள்மனம் | உணர்ச்சி சூட்சுமமாகும்.<br>மனிதன் பேசுவதும் நினைப்பதும் வேறு வேறு. | அகல்யா இந்திரனை விரும்பினாள். பஞ்சகன்னிகைகளில் அவளொருத்தி. |
| 4. | உள்மனம் பொருள் | அகந்தை மனோமயப்புருஷனாகும்.<br>சிந்தனை மௌனமாகும்.<br>காலம் தன்னைக் கடக்கும். | நளாயினி சூரியனை நிறுத்தினாள். |
| 5. | அடிமனம் | உலகம் பிரபஞ்சமாகும்.<br>காலத்தை கடந்தது.<br>மூன்றாம் நிலைக் காலமாகும். | அனுசுயா திருமூர்த்திகளை சிசுவாக்கியது. |
| 6. | அடிமனம் பொருள் | வலி ஆனந்தமாகிறது. | கிருஷ்ணன் பீஷ்மருடைய வலியை விலக்கியது. |
| 7. | வளரும் ஆன்மா | ஆனந்தம் நிரந்தரமாவது.<br>அகந்தையும், மனோமயப்புருஷனும் (சைத்தியப்புருஷனாக) வளரும் ஆன்மாவாவது. | கோபிகைகள் கிருஷ்ணனுடன் செய்த லீலை. |
| 8. | வளரும் ஆன்மா பொருள் | தீமையும், வலியும் திருவுருமாறி அற்புதமாவது.<br>பாதாளமும், பரமாத்மாவும் மனத்தில் சந்திக்கின்றன. | புலி தன்னைச் சாப்பிட விழைந்தது. |

- ❀ நஷ்டப்படாதவன் கோடீஸ்வரனானதில்லை.
- ❀ அடிக்கும் கையே அணைக்கும்.
- ❀ காய்க்கும் மரம் கல்லடி படும்.
- ❀ கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
- ❀ ஆவாதவன் ஆபத்தில் உதவுவான்.
- ❀ கொலை செய்வாள் பத்தினி.
- ❀ அரிச்சந்திரன் பொய்சொல்ல மறுத்ததால் பட்டபாடு பெரியது,

ஆகியவை உலக வழக்கு. இந்த 8 தலைகீழ் மாற்றங்களை அடுக்கடுக்காக வரிசைப்படுத்திக் கூறுவது சிரமம். ஏனெனில் 4, 5 நிலைகளில் உள்ளவை 1, 2 நிலைகட்கும் வரும். மரபு ஏற்கும் கருத்து இதுஎன அறிவது போதும். செயல்படுத்த தெளிவுவேண்டும். ஏதாவது ஒரு நிலையில் ஒரு விஷயம் தெளிவுபட்டால் மற்றவை புரியும். இரண்டு அரசியல் தலைவர்கட்கிடையேயுண்டான போட்டிக்குப் பலியானவருக்கு வாரண்ட் வந்தது. அதிலிருந்து தப்ப முடியாது என்றநிலையில் "நான் செய்த தப்புக்குத் தண்டனையை ஏற்கிறேன்" என்றார் பலியானவர். தவற்றை மனம் ஏற்றதால், வாரண்ட் இரத்தாயிற்று. வாரண்ட்டைப் பிறப்பித்தவர் நண்பரானார். நண்பர் பலியானவரை உச்சிக்குத் தூக்கி வைத்துவிட்டார். நம் சொந்த வாழ்வில் ஏற்பட்ட நிகழ்ச்சி தெளிவாகப் புரியும். அதை மனம் உண்மையாக ஆராய்ந்து ஏற்றால் தெளிவு வரும்.

- ❀ பங்காளி சவால் விட்டிருக்காவிட்டால் நான் M.P.யாயிருக்கமாட்டேன்.
- ❀ என் பங்காளி மானேஜராக இருந்து என் கண்களில் விரலைவிட்டு ஆட்டினான். அதனால் M.L.A. ஆனேன்; மந்திரியுமானேன்.
- ❀ நாத்தனார் உயிரை எடுத்தாள். அதனால் அமெரிக்கா வர முடிந்தது.
- ❀ என் கல்யாணத்தன்று என் நாத்தனார், வேறு பெண்ணை தம்பிக்கு மணம் முடிக்க ஆர்ப்பாட்டம் செய்திராவிட்டால், என் கணவர் இவ்வளவு ஆதரவு தந்திருக்கமாட்டார். அதனால் மாமியார், தாயார் போல நடந்தாள். 60 ஆண்டுகட்குப்பின் என் மகன் பேராசிரியராக இருக்கிறான். கங்கணம் கட்டியவர் பிள்ளைகள் ஒன்றுமில்லாமல் இருக்கிறார்கள்.
- ❀ என்உடன்பிறந்தவர் செய்த கேலியால் நான் பல நூறு கோடி



வியாபாரம் செய்கிறேன். என்னைப் பாசமாக நடத்தியிருந்தால் நானும் அவர்களைப்போலத் திவாலாகியிருப்பேன்.

- ❀ தாயாரும், உடன்பிறந்தவரும் செய்த கொடுமையால் திருமணமாகாதுஎன்று தெளிவாகத் தெரிந்தது. ஆனால் வெளிநாட்டு வரன் வந்து நானே நாட்டைவிட்டு வந்துவிட்டேன்.
- ❀ எனக்கு விசாவை மறுத்தார்கள். பட்ட சிரமம் ஏராளம். இன்று 10 வருஷத்திற்கு விசா கிடைத்துள்ளது. Visa on demand விசா ஏர்போர்ட்டில் டிக்கட் வாங்குவதுபோல் கொடுக்க சட்டம் பிறப்பிக்க யோசனை பிறந்துள்ளது.
- ❀ அமெரிக்காஎன்றால் கேலி செய்த உலகம் அமெரிக்காவைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளது.
- ❀ சிஷ்யனைக் கொலை செய்ய முயன்ற குரு அவனுக்கே சிஷ்யனானார்.

நிலைமை மாறி, நமக்கு நல்லது நடக்க நாளாகும். மனம் மாறினால் நிலைமை மாறும். மனம்மாற க்ஷணம் போதும். மாற நாம் முடிவு எடுக்க நாளாவது அறியாமை. மேற்சொன்னவற்றைக் கருதினால், பகவான் கூறுவதை ஏற்றால், அறியாமை விலகும்; நாளாவது குறையும். எந்தப் பிரச்சினைக்கும் உரிய மனநிலை எது, அது எந்தச் செயலில் வெளிப்படுகிறதுஎன அறிவது சிரமமில்லை. அச்செயலைத் தவிர்த்து, மனத்தை மாற்ற வேண்டும்.

**22. முக்கியமான சிறிய நிகழ்ச்சிகளில் சிருஷ்டிச் சிறப்பை அறிவது (Small significant acts). சிறிய நிகழ்ச்சிகள் பெரிய காரியத்தைப் பூர்த்தி செய்வது உண்டு. அவை சொர்க்க வாயில். அவற்றைக் காணும் சூட்சுமம் தேவை.**

- ❀ 1956-58இல் ஆசிரியர் தம் வீட்டில் வாழும் மாணவனை "நீ தொழிலதிபராக வேண்டும்" என்பார். 1975இல் மாணவன் ஒரு கம்பனி முதலாளியானான். இன்று அவனது கம்பனியில் 15 அல்லது 20 பாக்டரிகள் உள்ளன. ஆசிரியர் கூறியது மாணவனுக்கு நினைவிருக்கிறது; ஆசிரியருக்கு நினைவில்லை. நினைவிலும் இல்லாத நிகழ்ச்சி நிதர்சனமாவதை அவர் 2 ஆண்டாக அடிக்கடி கூறியது காட்டுகிறது.
- ❀ ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். எல்லா நிகழ்ச்சிகளையும்

அறிவு புரிந்துகொள்ள முடியாது. அதனால் அனைவரும் புரிந்து கொள்ளும் நிகழ்ச்சிகளைச் சகுனம் என்றனர். நிறைகுடம், வாய்ச்சொல், சுமங்கலி, தேவடியாள், அழுக்கைச் சுமக்கும் வண்ணான், கழுதை கத்துவது ஆகியவை சுபசகுனங்கள். சுபசகுனங்களை ஏற்று, அபசகுனங்களை எச்சரிக்கையாகக் கொள்கிறோம். அன்பர்நிலை அதுவன்று. **அபசகுனங்களை சுபசகுனமாக்கும் திறனும், சுபசகுனங்களை உயர்த்தும் திறனும் சமர்ப்பணத்திற்குண்டு**. சூழலை அறிய முயல்வது நல்லது.

❀ விவசாயம் செய்யும் அன்பருக்குப் பெரிய புத்தகக்கடை நண்பர் 15 அல்லது 20 குழந்தைப் புத்தகங்களை அன்பளிப்பாக அனுப்பினார். நன்றியுடன் பெற்றுக்கொண்டார். அவற்றுள் 'விவசாயக் கையேடு' என்ற சர்க்கார் பிரசுரமிருந்தது. **'என்னைத் தேடி இது வரக் காரணம் என்ன' என்று கருதி அதைப் புரட்டிப் பார்த்தார்**. அவர் செய்யும் விவசாயத்திற்கு அரசு பண உதவி செய்யக்கூடிய பார்லிமெண்ட் சட்டம் நிறைவேறியதைப் புத்தகம் கூறிற்று. அது 1968. பாங்க் விவசாயத்தில் பங்குகொள்ளாத காலமிது.

❀ காமராஜ் அரசியலில் 1930இல் நுழைந்தார். 1960இல் அகில இந்தியப் பிரசித்தி பெற்றார். காந்திஜி 1915இல் இந்தியா வந்தார். இந்தியா புகழ்மாலை சூட்டி வரவேற்றது. 1919இல் அகில இந்தியாவும் அவரை ஏற்றது.

✡ **ஒரு காரியம் 50 ஆண்டில் பூர்த்தியாகும்.**

சூட்சுமம் தெரிந்தால் 5 ஆண்டிலும் பூர்த்தியாகும்.

✡ நம் வாழ்வு அனைத்தும் சூட்சுமமானது.

சிறு விஷயங்களை அலட்சியம் செய்யாமல் கவனித்தால் புரியும்.

சூட்சுமம் புரிந்தால், சூட்சுமத்திற்கேற்ப நடக்க மனம் மாற வேண்டும்.

சூட்சுமம் சொர்க்க வாயில், மனமாற்றம் கருவி.

சத்தியம் மனமாற்றத்தை நிலைபெறச் செய்யும்.

**எதிர்காலத்தை இன்று நடப்பவை தவறாது காட்டும்**.

அதை அறிய முயல்வது ஆபத்தை விலக்க உதவும்; அதிர்ஷ்டத்தை ஏற்படுத்த உதவும்.



நம் விருப்பத்தை ஒதுக்கி, நடப்பவற்றை அன்னைச் செயலாக ஏற்பது சரியான மனநிலை.

5 அல்லது 10 ஆண்டாக அரைகுறையாக உள்ள பெருங் காரியத்தை அதுபோல் இன்று கவனித்து, மனம் மாறி, சத்தியமாகப் பின்பற்றினால் வளரும் தாமதம் விலகி, முடிவு உடனே நம்மை எதிர்கொள்ளும்.

**எரிச்சலைத் தவிர்த்து, நம்மை வலியுறுத்தாத பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும்**.

## 23. நீ பாடும் சிறப்பான பாட்டை மேலும் சிறப்பாகப் பாட முயலுதல்.

❀ ஆண்டவனை நோக்கி ஓர் அடி வைத்தால் ஆண்டவன் நம்மை நோக்கி 10 அடி எடுப்பான்.

❀ ஆண்டவனை நோக்கி ஓர் அடி எடுப்பது என்றால் என்ன?

❀ **வாழ்வு புனிதமானது, அதனால் வாழ்வு ஆண்டவன். வாழ்வு செயலாலானது, அதனால் செயல் ஆண்டவன். சிறப்பு இறைவன். அதனால் சிறப்பை நாடுவது ஆண்டவனை நோக்கி ஓர் அடி எடுத்து வைப்பதாகும்**.

❀ இதெல்லாம் என்னால் முடியாதுஎன எவரும் கூற முடியாது என்பது ஸ்ரீ அரவிந்தம்.

பாட்டுப் பாடுவதும், நாட்டை ஆள்வதும் இறைவனுக்குச் சமம்.

பாட்டின் தரம் உயர்வது எவரும் செய்யக்கூடியது.
(செயலின் தரம் உயர்வது இறைவனை நாடுவது).

பாட்டு உதாரணம். எந்தச் செயலுக்கும் இது பொருந்தும்.

மேலும் சிறப்பாக நாம் பாடும் பாட்டைப் பாட எவரும் விரும்புவர்.

ஆண்டவனை நாடுவது ஆனந்தமான செயல்; கடுமையான விரதமன்று.

கடுமையான விரதத்தைத் தவிர்த்து இனிமையான சிறப்பை நாடுவது ஸ்ரீ அரவிந்தம்.

அம்முயற்சிக்கு முடிவில்லை.

தானே ஓரளவுக்குச் செய்யலாம்.

மீதியுள்ளதை அடுத்தவர் உதவியால் சாதிக்கலாம்.

பிறர் உதவியை நாடும்பொழுது பிறரை இறைவனாகக் கொள்வதால் அதுவே பெருமுயற்சியாகும்.

சங்கீதத்தில் குரல் ஒரு பகுதி, பாட்டு அடுத்த பகுதி, சாகித்தியம் அடுத்தது, பயிற்சி பெரும்பகுதி, நமக்கு இனிப்பது ஒன்று, அடுத்தவர் ரசிப்பது அடுத்தது, பலரும் பாராட்டுவது முடிவானது.

குரல் இனிக்க நாம் செய்யக்கூடியதுண்டு.

குரலை அன்னையாக உருவகப்படுத்தினால் குரல் இனிமை கூடும்.

பாட்டின் கருத்தை அறியாமல் பாடுவதுண்டு.

**அர்த்தம் புரிந்து பாடினால், கருத்து கண்டத்து ஒலியாகக் கணீரென ஒலிக்கும்.**

சாகித்தியம் பெரிய சாஸ்த்திரம்.

அதை அறிவதற்கு முடிவில்லை.

ராகம் ஒரு சமுத்திரம்.

பயிற்சியை விரும்பி ஏற்க வாழ்க்கையில் கட்டுப்பாடு வேண்டும்.

பயிற்சிக்கும் பல மணி தேவை. அதற்கு வாழ்க்கை ஒத்து வர வேண்டும்.

வாழ்வு ஒத்துழைக்க மனம் இசைவது அன்னையை ஏற்பது.

பாடுவது வேறு, இனிப்பது வேறு.

பாட்டு இனித்தால் முடிவாக உடல் புல்லரிக்கும்.

நமக்கு இனிப்பது வேறு, அடுத்தவர் ரசிப்பது வேறு.

(ஐன்ஸ்டீன் கண்டது அவருக்கு மட்டும் புரிந்தது.

பகவான் வகுத்தது அவர் மட்டும் விளங்கிக் கொண்டது).

அடுத்தவர் ரசிக்க நாம் அடுத்தவர் மனம்மூலம் சிந்திக்க வேண்டும்.

உலகம் பாராட்ட உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும்.

**எந்தக் காரியத்தையும் ஒரு படி உயர்த்த முடியும்.**

**அதன் முடிவு ஆண்டவன்.**



## 24. சிறப்பாகச் செய்யும் சமையலை, மேலும் இனிப்பாக, சுவையாகச் செய்வது.

சமையல் வேலை எளிமையானது. பாத்திரம் தேய்ப்பதற்கு சற்று மேலானது.

சமையலுக்குச் சிறப்புண்டு.

ருசியான சமையலை இனிமையாகப் பரிமாற மனம் உயர்ந்திருக்க வேண்டும்.

சமையலில் ருசி திறமையைப்பொருத்தது; இனிமை குணத்தைப் பொருத்தது.

நம்மவர் அதை இராசி என்பர்.

சமையலில் நல்ல பேர் வாங்கியவருண்டு.

அதன் தரத்தையும் உயர்த்த முடியும். அது ஒரு நுணுக்கமான கலை.

'பதமாகப் பழகுபவர்', 'சமையல் பதம்' என்பவை உயர்ந்த தமிழ்ச் சொற்கள் (excellent Tamil idioms).

சாம்பார் செய்யும்பொழுது தண்ணீர் மாறினால் ருசி மாறும்.

Gas நின்று 5 நிமிஷம் கழித்து மீண்டும் ஏற்றினால் அது சாம்பாரின் ருசியை மாற்றவல்லது.

உப்பு சற்று குறைவாக இருப்பதால் இரண்டாம் முறை சேர்த்து சரி செய்தால் சாம்பாரில் (original taste, ரஸா) மணம் மாறும்.

சாம்பாருக்குரிய பருப்பின் தரம் எவ்வளவு நாள் பழகியது, செய்யும் பாத்திரம், எரியும் அடுப்பு, துழாவும் பாணிஎன ஒவ்வோர் அம்சமும் ருசியை நிர்ணயிக்கவல்லது.

அவை அனைத்தையும் சிறப்பாக உயர்த்த ஒரு பட்டமளிப்பு விழாவை நடத்த எடுக்கும் முயற்சியை மனத்தால் எடுக்க வேண்டும். அது கலையின் சிகரம்.

இதுவரை பொருள்; அடுத்தது மனம்.

சமையல் ருசிக்க மனம் இனிக்க வேண்டும்.

வீட்டில் 5 பேர் சாப்பிட்டால் 5 பேருடைய தேவைகளும் மாறுபட்டிருக்கும்.

சாப்பிடுபவர் விரும்பும் உப்பு, காரம், சூடு, பதம் செய்பவருக்குத் தானே

தெரிவது psychic quality ஆன்மாவின் சுவை.

செய்தவர் வயிறு, சாப்பிடுபவர் சாப்பிடும்பொழுது குளிர்வது நல்ல சமையலுக்கு அடையாளம்.

பொருள் சிறப்பாக இருந்து, மனம் மணமாக இருந்தால் அன்றாடச் சாப்பாடு அமிர்தமான விருந்தாகும்.

சமையல் செய்ய விரும்புகிறவர்க்கு உரிய யோகப் பயிற்சியிது.

சமையல் தரத்தை இழைஇழையாக உயர்த்துவது அப்பயிற்சி.

சமையல் உச்சியைத் தொட்டால், எடுத்துக்கொண்ட காரியம் முழுவதும் குறைவற நிறைந்து பூர்த்தியாகும்.

எந்த வேலையையும் சிறப்பாகச் செய்தால் சிறப்பு நிறையும்பொழுது நம் வாழ்வில் உள்ள திட்டம் project அபரிமிதமாகப் பூர்த்தியாகும்என்பது சட்டம்.

சமையலில் நாட்டம் உள்ளவர்க்குரிய பயிற்சி இது.

சமையல் உண்மையிலேயே ஒரு சிறந்த கலை.

சிறந்த கலையை உன்னதமாக்கி உயர்த்துவது வாழ்வை யோகம் ஆக்குவதாகும்.

## 25. மனம் எழுப்பும் தவறுகளை, தவறாது நேர்படுத்துதல்.

மனிதனுக்குப் பிரச்சினையில்லை; அவனே விரும்பி ஏற்படுத்துவதே பிரச்சினை என்பது ஆன்மீகச் சட்டம்.

சுமார் 100 ஆண்டுகட்குமுன் நியூயார்க்கில் கூலிக்காரர் சில மாதங்களில் மத்தியதரக் குடும்பமாயினர். அங்கு கூலி 10 மடங்கு அதிகம். வரலாற்று ஆசிரியர் ஒருவர் ‘‘இன்று ஒருவர் இங்கு பட்டினியிருந்தால், அதற்கு அவரே பொறுப்பு’’ என்றார். சாதாரண மனிதனுக்கு வாழ்வில் ஒரு முறையும் வாராத வாய்ப்புகளை அன்னை பல முறையும் அடுக்கடுக்காக வழங்கும்பொழுது, மனிதன் அவ்வாய்ப்பை இழந்தால் எவரும் அவருக்குத் துணைபோக முடியாதுஎன நான் கூற விரும்புகிறேன்.

**பெரிய வாய்ப்பு வரும்பொழுது மனம் தவறாது இதுவரை இல்லாத தவற்றைச் செய்யத் துடிக்கும்.**



பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்த-வரை பட்டமளிப்பு விழாவில் பேச அழைத்தால், அந்த நேரம் அவருக்கு எதிர்வீட்டு மனிதனின் அல்பத்தனத்தைப் பற்றிப் பேசத் தோன்றும்.

**சொல் வாயைவிட்டு வெளிவந்த நேரம் அழைப்பு ரத்தாகும்.**

அன்பர்கட்கு வாராத வாய்ப்பில்லை; அவர்கள் தவறவிடாதவையுமில்லை.

- 1½ இலட்சத்திற்கு மேல் ஆர்டர் வாராத கம்பனிக்கு 2½ கோடி ஆர்டர் வருவது.
- முனிசிபல் கௌன்சிலராக நிற்க முடியாதவருக்கு M.P. சீட் வருவது.
- எந்தப் பத்திரிகையிலும் ஓய்வு பெறும்வரை எழுதியறியாதவர்க்கு புத்தகம் எழுதும் வாய்ப்பு வருவது.
- கலெக்டர் ஆபீசிற்குப் போய் வரும்பொழுது தாசில்தாருக்குக் கும்பிடு போடுபவர்க்கு முதல்மந்திரியிடம் அணுகும் நேரம் வருவது.
- டெல்லிவரை போகாதவர் அமெரிக்கா போவது. அதை 20 முறையும் ஏற்பது.

இதுபோன்ற நேரங்களில், அதே நேரம், குணம் எழுந்து நேர்எதிராகச் செயல்படும். அப்பொழுது,

- டிரைவரைக் காரமாகத் திட்டத் தோன்றும்.
- காபியில் சர்க்கரை சரியில்லையென தூக்கி எறிவார்.
- தனக்குப் பேர்உதவி செய்பவருக்கு ஒரு (motive) காரணம் கற்பிப்பார்.
- டஜன் 85 ரூபாய்க்கு வழக்கமாக வாங்கும் பழத்தை 5 ரூபாய் குறைத்து அதிக பேரம் செய்வார்.
- பையன் சினிமாவுக்குப் போகப் பணம் கேட்டால் பெருமை பிடிபடாமல் 1000 ரூபாய் எடுத்துக்கொடுப்பார்.
- இதுவரை வாயில் வாராத மட்டமான சொல் தானே வெளிவரும்.

மனம் அவசரப்படும், பொறாமைப்படும், குதர்க்கமாகப் பேசும், பேராசைப்படும், நமக்கு உரிமையில்லாததைக் கேட்கும், பிறர் உரிமையை பறிக்கத் துடிக்கும், கேலியாக நினைக்கும். Self-awareness தன்னை அறிவது மனத்தை நமக்கு விளக்கும். இவை பிறவியுடன் வந்ததால்

நம்மை மீறிச் செயல்படுபவை. இவற்றை மனத்தால் கட்டுப்படுத்த முடியாது. **அன்னையிடம் விட்டுவிட்டால் அன்னை கட்டுப்படுத்துவார்**. கடைத்தெருவில் சிறுகுழந்தையை கன்ட்ரோல் செய்வதைப் போன்ற கடுமையான காரியம். பல சிறுகுழந்தைகள் அடக்கமாக இருப்பதையும் நாம் காண்கிறோம். அதுபோல் மனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். அதை அன்னையால் செய்தால் நம் முயற்சியின்றி மனம் தானே அடங்கும். அதைச் செய்தபின்,

1) இன்றுள்ள எந்தப் பிரச்சினையும் இருக்காது.

2) இன்றில்லாத அத்தனை வாய்ப்புகளும் ஒரே நேரம் வரும்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனின் நிலைகள் பல. மேலெழுந்த மனதிலும் ஆழ்ந்த உணர்விலும், சூட்சும உடலிலும், உணர்விலும், உடலிலும், காரணதேகத்திலும், அகந்தையிலும், சைத்தியப்புருஷனிலும், புருஷனிலும், ஈஸ்வரனிலும் மனிதன் நிலைபெற்றிருக்கிறான். இந்த எல்லா நிலைகளிலும் அன்னை இருக்கின்றார். நம் அழைப்பின் திறனுக்கேற்ற நிலையிலிருந்து அன்னை பதில் அளிக்கிறார். ஆழ்ந்த நிலைக்குப் போனபின்னும் மேல்மனத்தின் பழக்கம் அங்கும் வருமானால், அந்தக் குறையால் அழைப்பின் திறன் குறையும்.

***அன்னையில்லாத இடமில்லை.***

***பழைய பழக்கம் அழைப்புக்குத் தடை.***



"Agenda"

**மனித ஜீவியம் அனந்தத்துடன் தொடர்புகொள்ளும் வாயில்கள் திறந்துள்ளன. அது பலிக்க:**
**1. தீவிரம்,**
**2. அகந்தை கரைவது**
**தவிர்க்க முடியாத நிபந்தனைகள்.**

✡ **பௌத்த மதம் ஆசியா முழுவதும் பரவியதற்குக் காரணம் அம்மதம் அகந்தையை வளரவிடுவதில்லை. தான்எனும் முனைப்பு அம்மதத்தைச் சார்ந்தவர்க்கிருக்காது.**

✡ **தாவரம், விலங்கு ஆகியவற்றை sub-conscient என்ற பகவான் மனிதனை conscient என்றார். Conscient என்றால் கண் திறந்துள்ளது எனவும், sub-conscient என்றால் கண் முழுவதும் திறக்கவில்லை எனவும் பொருள்.**

❀ **நாகரீகம்என உலகம் அறிந்தது முழுவதும் விலங்கால் ஏற்படவில்லை. மனிதனால் மட்டுமே ஏற்பட்டது.**

❀ **அவன் மனம் செயல்பட்டுப் புதியதாக மாறியவை நாகரீகம்.**

❀ **மனிதருள் மாணிக்கமாக விளங்குபவன் ரிஷியும் கவியுமாகும்.**

**நமக்கு முக்கியமாக இல்லாதவற்றுள் கவி இறைவனைக் காண்கிறான், அழகைக் காண்கிறான்.**

**இரவில் கவி வானவெளியில் தன்னை இழந்துவிடுவதுண்டு.**

**சூரியோதயம், சூரிய அஸ்தமனம் கவிகட்குப் பெரிய பேறு.**

**குயிலின் குரலைக் கேட்ட கவி தன் வயமிழக்கிறான்.**

**கவி கண்டு மகிழ்வதை நாமும் ஓரளவு பாராட்டுகிறோம்.**

**குழந்தைகளைக் கண்டு நாம் மலர்கிறோம்.**

**மலரின் மணம் மகிழ்விக்காதவருண்டோ!**

**பாம்புகளில் அதிக விஷமுள்ளதை நல்லபாம்பு என்கிறோம்.**

**'மூங்கிலிலை மேலே தூங்கும் பனிநீரை' கம்பனும் வியக்கும்படி 'வாங்கும் கதிரோனே'என ஏற்றப்பாட்டுக் கொண்டாடுகிறது.**

**அடிக்கும் கை அரவணைக்கும்.**

**காய்க்கும் மரம் கல்லடி படும்என முரண்பாட்டை மனிதன் உடன்பாடாகக் கருதுவது அவற்றின்பின் ஆண்டவனிருப்பதை அவன் காண்பதாகும்.**

**இளம் உள்ளங்கள் இணைவதைக் காதல்என உலக இலக்கியம் பாராட்டுகிறது.**

**வீரனைப் பாராட்டாதவரில்லை.**

**அனந்தம் அழகாக மனித மனத்தைத் தொட்டவாறு உள்ளது.**

**ராஜ்ய பாரத்தை விட்டு துறவறம் மேற்கொண்டவர் இறைவனை நடைமுறையில் பாராட்டுகிறார்.**

**சிபிச்சக்ரவர்த்தி, மனுநீதிச் சோழன் இறைவனின் கருணையை இதயத்தில் கண்டவர்.**

**பத்தினி விரதம் பகலவனையும் நிறுத்தும் என்றாள் நளாயினி.**

**திருமூர்த்திகளும் கற்பின் பெருமைக்குத் தலைகுனிந்தனர்.**

**இறைவனை மனிதன் இடைவிடாது அறிய அவன் ஜீவியத்தின் வாயில்கள் திறந்துள்ளன.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்தைக் கடக்கும் முயற்சியில் அடுத்தவர் கோணத்தில் பார்ப்பது பெரிய முன்னேற்றம் என்றாலும் அது மனத்தின் எல்லைக்குள் உள்ள முன்னேற்றமேயாகும்.

***மனிதனுக்குப் பெரிய முன்னேற்றம் மனித முன்னேற்றம்.***



# அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்துகொள்ள வேண்டியது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**5. முன்னேற்றத்திற்கு தனித்தன்மை (individuality) மிகவும் அவசியம். Value-based functioning இருக்கும்பொழுது முன்னேற்றம் விரைவு பெறுகிறது.**

இந்தியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இருக்கின்ற மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால் அவர்களுக்குத் தனித்தன்மை, அதாவது individuality அதிகம். நமக்கு அது குறைவு. தனித்தன்மை மிகுந்தவர்கள் சுதந்திரமாகச் செயல்படுவார்கள். தனக்குச் சரி என்று படுவதைச் செயல்படுத்துவார்கள். Self-reliantஆகவிருப்பார்கள். அடுத்தவர்கள் உதவியையோ, ஆதரவையோ நம்பியிருக்கமாட்டார்கள். தன்கையே தனக்கு உதவி என்று தான் செயல்படுவார்கள்.

இவ்விடங்களில் இந்தியர்களின் பர்சனாலிட்டியே வேறுவிதமாக செயல்படுகிறது. நமக்குச் சரியென்று படுவதால்மட்டும் நாமொரு வேலையைச் செய்வதில்லை. குடும்பம், உற்றார், உறவினர் மற்றும் சமூகம் ஆதரித்தால்தான் நாம் அவ்வேலையைச் செய்வோம். ஊரோடு ஒத்து வாழவேண்டும். அதுதான் நமக்குப் பாதுகாப்பாகவிருக்கும்என்பது நம்முடைய கலாச்சாரத்தில் ஊறிப்போய்விட்டது. இதை ஆங்கிலத்தில் social conformity என்கிறார்கள். முன்னேற்றத்தை விரைவுபடுத்த நாம் முயலும்பொழுது இத்தகைய social conformity தடையாக வந்து நிற்கிறது.

சுயதொழிலும் enterpriseம்தான் நாட்டிற்கு இப்பொழுது தேவை என்னும்பொழுது, ஊரில் நாலு பேர் employmentயைத்தான் தேடுகிறார்கள் என்ற ஊர்ப் பழக்கத்தை மீறித் தைரியமாகச் சுயதொழிலில் இறங்க

இளைஞர்கள் தயங்குகிறார்கள். அப்படித் துணிந்து செயல்படுகின்றவர்களையும் உற்றார், உறவினரும் சமூகமும் அதைரியப்படுத்திவிடுகின்றார்கள். அதனால் அவர்கள் ஆரம்பத்தில் சந்திக்கின்ற தடைகளைக் கண்டு பயந்து, பின்வாங்கிவிடுகின்றார்கள்.

சடங்கு, சம்பிரதாயம், ஜாதகம், வாஸ்து, இராகுகாலம் போன்றவை எல்லாம் நம்முடைய பழங்கால வாழ்க்கையைச் சேர்ந்தவை. இவையெல்லாம் நம் முன்னேற்றத்தைத் தடை செய்யுமே தவிர, முன்னேற்றத்திற்கோ, நவீனமயமான வாழ்க்கைக்கோ ஒத்துவாராதவை. திருமணங்களை ஆடம்பரமாகச் செய்யும்பொழுது நிறைய பணம் விரயமாகிறது. ஆனால் அதுதான் இப்பொழுது fashion என்றும், மரியாதை என்றும் ஆகிவிட்டது. இதனால் பணபலமில்லாதவர்களும் கடன் வாங்கியாவது ஆடம்பரமாகத் திருமணங்களை நடத்த முயன்று வீண் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவ்வாடம்பரம் அனாவசியம் என்று எல்லோருக்கும் தெரிந்தாலும், துணிந்து எளிமையாகத் திருமணங்களை நடத்த மக்கள் முன்வர தயங்குகிறார்கள். சமூகத்திற்குப் பயந்து தேவையில்லாத ஆடம்பரங்களுக்கு அடிமையாகிப் பணத்தை விரயமாக்குகின்றனர்.

அமெரிக்கர்கள் இப்படிச் சமூகத்திற்குப் பயந்து வீண்செலவிற்கு அடிமை ஆவதில்லை. 1960இல் பெட்ரோல் விலை மலிவாக இருந்த பொழுது பெரிய கார்களை வைத்துக்கொண்டு பயணம் செய்வது அங்கே fashionஆகவிருந்தது. ஆனால் பெட்ரோல் விலை ஏறியபின்பு பெரிய கார் வைத்திருந்தால் petrol consumption அதிகமாகிறதுஎன்று தெரிய வந்தது. உடனே எல்லோரும் சிறிய fuel-efficientஆன Japanese கார்களுக்கு மாறிவிட்டனர். வறட்டு கௌரவம் பார்த்துக்கொண்டு, பெரிய கார்களையே வைத்துக்கொண்டு யாரும் வீண்செலவு செய்வது இல்லை.

அங்கே individuality அதிகம் என்பதால் யார் தயவையும் எதிர்பார்க்காமல் சொந்தக்காலில் நிற்பதைத்தான் அதிகம் விரும்புகின்றனர். இங்கே அரசாங்கத்திடம் கிடைக்கும் மான்யம், subsidy, சலுகை என்றிவற்றை நம்பியே மக்கள் தம்முடைய முயற்சியைக் குறைத்துக்



கொண்டு அரசாங்கத்தின் ஆதரவை அதிகம் நாடுகிறார்கள். விவசாயிகள் இலவச மின்சாரத்தை நீட்டிக்கச் சொல்கின்றார்கள். வசதியானவர் கூட ரேஷன்கார்டுமூலம் மலிவான விலையில் பொருட்களை வாங்கப் பிரியப்படுகின்றார்கள். உண்மையில் ரேஷன் என்பது வறுமைகோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்காக ஏற்பட்டது. அந்தச் சலுகை விலையில் வசதியானவர்களும் வாங்கப் பிரியப்படுவது நியாயமாகப் பார்த்தால் வெட்கப்பட வேண்டிய விஷயம்.

மாமனார் ஸ்கூட்டர் வாங்கித் தரவேண்டும், கார் வாங்கித் தர வேண்டும், 50 ஆயிரம் அல்லது இலட்ச ரூபாய் வரதட்சிணை தர வேண்டும்என்று மாப்பிள்ளையும் வரன் வீட்டாரும் கேட்பது இங்கே வாடிக்கையாகிவிட்டது. அங்கே இத்தகைய காட்சிகளைப் பார்க்கவே முடியாது. இப்படித் திருமணத்தின்மூலம் ஆதாயம் தேடுவதை அமெரிக்கர்கள் தங்களுடைய self-relianceற்குக் களங்கமாக எடுத்துக்கொள்வார்கள். ஆனால் இங்கே மேரேஜ் மார்க்கெட்டில் தனக்கு எவ்வளவு வரதட்சிணை கிடைக்கும் என்பதை மணமகன் பெருமையாகப் பேசிக் கொள்கிறான்.

இங்கே நாட்டை தொழில்மயமாக்குவதற்காக அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளும் அரசாங்க ஏஜென்சிகளும் cottage industries மற்றும் small scale industriesகளுக்கும் தொழில்முனைவர்களுக்கும் வழங்கும் கடன் மற்றும் நிதியுதவியைக் கண்டு அமெரிக்கர்கள் அசந்துபோகின்றார்கள். எங்கள் நாட்டில் வங்கிகள் இப்படியொரு தாராள மனப்பான்மையுடன் நிதியுதவியெல்லாம் வழங்குவதே இல்லை. நாங்களே முதலீடு செய்து தொழிலை வெற்றிகரமாக நடத்தி, நல்ல லாபமீட்டும் நிலைமைக்கு வந்த பின்னர்தான் மேற்கொண்டு அபிவிருத்திக்காகக் கடன் கேட்க முடியும். இங்கே தாயார் குழந்தைக்கு உணவு ஊட்டுவதுபோல வங்கிகள் மக்களுக்கு நிதிவசதியை வழங்குகின்றன. இவ்வளவு நிதியுதவி பெறும் பொழுது ஏன் இன்னமும் நாடு தொழில்மயமாகவில்லைஎன்று கேட்கிறார்கள்.

முதலீட்டைத் தாமே திரட்ட அமெரிக்கர்கள் முயலும்பொழுது

அதிலுள்ள சிரமங்களைச் சந்திக்கும்பொழுது அவர்களுடைய organising ability வளர்கிறது. அதனால் அவர்களால் வெற்றிகரமாகத் தொழிலை ஆரம்பித்து நடத்த முடிகிறது. இங்கே அந்த முயற்சி இல்லாமல் பணம் சுலபமாகக் கிடைக்கும்பொழுது அதனுடைய அருமை நமக்குப் புரிவது இல்லை. அதனால் அந்தப் பணம் நமக்கு உபயோகப்படுவதில்லை.

Microsoft Chairman Bill Gatesஉடைய சொத்தின் மதிப்பு 2,30,000 கோடி ரூபாயாகும். அவருக்கு மூன்று பிள்ளைகள்; இரு பெண்கள், ஒரு பையன் உள்ளார்கள். அவர்களுக்கு இப்பொழுது 9 வயதிலிருந்து 2 வயதுதானாகிறது. ஓர் இந்தியத் தகப்பனாராக இருந்தால் இந்த 2,30,000 கோடியில் 2,00,000 கோடியையாவது தன் பிள்ளைகளுக்கு ஒதுக்கிவைத்திருப்பார். ஆனால் Bill Gates இவ்வளவு பெரிய சொத்தில் வெறும் 300 மில்லியன் டாலர்தான் (1350 கோடி) பிள்ளைகளுக்கு தருவேன். அதற்குமேல் தந்தால் அவர்கள் பணத்தின் அருமை தெரியாமல் வீணாக்கிவிடுவார்கள் என்றொரு கருத்தைத் தெரிவித்தார். இப்படிப் பெரும்பணக்காரர்கூட பிள்ளைகளை self-reliantஆகவே வளர்க்க விரும்புகின்றார்கள்.

அமெரிக்காவில் 1½ வயதிலிருந்து 2½ வயதிற்குள் குழந்தைகளுக்கு ஸ்பூன் எடுத்துச் சாப்பிடவும், டாய்லட் ட்ரெயினிங்கும், ட்ரஸ் பண்ணிக் கொள்ளவும், தலைவாரிக்கொள்ளவும் கற்றுக்கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் இங்கே 4 வயது குழந்தைக்குக்கூட தாயார் ஊட்டிவிடுவதை நாம் பார்க்கலாம். Self-reliantஆகவிருக்கவேண்டும் என்பது அவர்கள் நோக்கமாகவிருப்பதால் சிறு வயதிலேயே இப்படிப்பட்ட ட்ரெயினிங்கை ஆரம்பித்துவிடுகிறார்கள். இங்கே வயதாகிவிட்டால் பிள்ளை காப்பாற்று-வான் என்ற நம்பிக்கையுடன் பல பெற்றோர் இருக்கிறார்கள். ஆனால் அங்கே அம்மாதிரியான எதிர்பார்ப்புகளைப் பெற்றோர் வைத்துக் கொள்வது இல்லை. தம்முடைய சேமிப்பு, ஓய்வூதியம், social security benefits என்றிவற்றை நம்பித்தான் முதுமைக் காலத்தைச் சந்திக்கின்-றார்களேயொழிய, கடைசிக் காலத்தில் பிள்ளையோடு போய் சேர்ந்து கொள்ளலாம் என்று நினைப்பதில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து



வயோதிகம் வரை இப்படி self-reliance என்ற மனோபாவத்துடன்தான் வாழ்க்கையை நடத்துகிறார்கள். இங்கே கணவன் கைவிட்டால் இரண்டு, மூன்று பிள்ளைகளுடன், படிப்பறிவில்லாமல், வேலைக்குப் போய் வருமானம் தேடிக் கொள்ள முடியாமல் நிர்க்கதியாக நிற்கும் அபலைப்பெண்கள் அதிகம். அங்கே இப்படிப்பட்ட நிலைமை வந்தால் சமாளிக்கவேண்டும் என்பதற்காக பெண்களும் நன்கு படித்து, சுயமாகச் சம்பாதிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இதனால் கணவன் கைவிட்டாலும் நடுத்தெருவிற்கு வருவதில்லை. பெற்றோரிடமோ, உறவினரிடமோ அடைக்கலம் வேண்டுமென்று கெஞ்சுவதில்லை.

இத்தகைய self-reliance நம் நாட்டவரிடமும் வந்தால் நாடு விரைவாக முன்னேறும். விவசாயிகள் இலவச மின்சாரம் கேட்பதால் அரசாங்கத்-திற்கு மின்உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களில் முதலீடு செய்ய ஆர்வம் இல்லாமல் போகிறது. இலவசமாக மின்சப்ளை வழங்குவதால் 5 அல்லது 6 மணி நேரந்தான் கிராமப்புறங்களில் சப்ளை வருகிறது. உரிய கட்டணம் கொடுக்க விவசாயிகள் முன்வந்தால் அரசாங்கமும் மின் உற்பத்தியைப் பெருக்கும். விவசாயிகளுக்கும் 24 மணி நேரமும் மின் சப்ளை கிடைக்கும்.

நம் நாட்டின் முன்னேற்றப் பணிகளுக்கு foreign aid கிடைக்குமா என்று நம்முடைய அரசாங்கம் ஏங்கிக்கொண்டிருந்த நாட்களுண்டு. ஆனால் அமெரிக்காவின் சரித்திரத்தைக் கவனித்துபார்த்தால் இப்படி foreign aidயையெல்லாம் நம்பி அந்நாடு முன்னேறியதாகத் தெரியவில்லை. தங்களுடைய சொந்த உழைப்பு மற்றும் திறமை மற்றும் natural resourceயை வைத்துத்தான் அந்நாட்டு மக்கள் முன்னேறியுள்ளார்கள். அதே பாலிசியை நம் நாட்டிலும் பின்பற்றி aids கேட்கும் மனப்பான்மையை உதறித் தள்ளிவிட்டு நம் சொந்தச் சேமிப்பை அதிகரித்து, அதையே முதலீடாக்கி முன்னேற முயன்றால், இதில் நாம் வெளிப்படுத்தும் self-reliance நம் முன்னேற்றத்தை விரைவுபடுத்த உதவும்.

வருமானத்திற்கும் value-implementationற்குமுள்ள தொடர்பை அமெரிக்கர்கள் நன்கு தெரிந்துவைத்துக்கொண்டுள்ளார்கள். ஆகவே

அவர்கள் வருமானத்தை உயர்த்த விரும்பினால் value-implementationயை மேலும் அதிகப்படுத்துகிறார்கள். சுத்தம், ஒழுங்கு, காலந்தவறாமை, குவாலிட்டி (quality), கஸ்டமர் satisfaction, நேர்மை, முறையாகக் கணக்கு எழுதுதல், on-time delivery, சுமுகம், விரயம் தவிர்த்தல், systematic செயல்பாடு போன்ற பண்புகளை அவர்கள் பிஸினஸில் நம்மைவிடப் பல மடங்கு சிறப்பாகக் கடைப்பிடிக்கின்றார்கள். அதற்கேற்றாற்போல அவர்கள் வருமானமும் பலமடங்கு அதிகரித்துள்ளது.

Federal Express என்ற courier service அங்கு செயல்படுகிறது. அமெரிக்காவிற்குள் எந்தவோர் இடத்திற்கும் 24 மணி நேரத்திற்குள் courierஐ டெலிவரி செய்துவிடுகிறார்கள். அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்கும் மேற்குக் கடற்கரைக்குமிடையே உள்ள தூரம் கிட்டத்தட்ட 5000 கிலோமீட்டராகும். New Yorkகிலிருந்து San Franciscoவிற்கு அனுப்புகின்ற courierஐ மறுநாள் டெலிவரி செய்துவிடுகின்றார்கள். அப்படி அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் தாமதமானால் அவர்கள் வாங்கிய கட்டணத்தொகையை refund செய்துவிடுகிறார்கள். On-time delivery என்ற valueவை அக்கம்பெனி எவ்வளவு serviceஆக எடுத்துக்கொண்டிருந்தால் இப்படி கட்டணத்தொகையை refund செய்வார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். சென்னையிலிருந்து டெல்லி சுமார் 2000 கிலோமீட்டர் தூரத்தில்தானுள்ளது. இந்த தூரத்தில் டெலிவரி செய்வதற்கே சென்னையிலுள்ள courier கம்பெனிகள் 2 நாட்கள் கால அவகாசம் கேட்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது 5000 கிலோ மீட்டர் தூரத்தை தாண்டி 24 மணி நேரத்திற்குள் டெலிவரி செய்கிறார்கள் என்றால் இந்த Federal Express Courier company எவ்வளவு systematicகாகச் செயல்பட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பதை நாம் கருதவேண்டும்.

40,000 அல்லது 50,000 சதுர அடி கொண்ட டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களை மிகவும் சுத்தமாக வைத்துள்ளார்கள். அங்குள்ள பல்லாயிரக்கணக்கான பொருட்களை அழகாக அடுக்கிவைத்துள்ளார்கள். பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வந்துவிட்டுப் போகிற இடத்தில்,



பொருட்களை வரிசை கெடாமல் வைத்திருப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நாமெண்ணிப் பார்க்கவேண்டும். சென்னையிலுள்ள ஸ்பென்சர் பிளாசா ஷாப்பிங் காம்ப்ளக்ஸைப் பார்த்து மக்கள் பிரமித்துப் போகிறார்கள். இம்மாதிரி நூற்றுக்கணக்கான ஷாப்பிங் பிளாசாக்கள் அமெரிக்காவிலுள்ளன. அவற்றையெல்லாம் கண்ணைக் கவரும்வகையில் சுத்தமாக வைத்துள்ளார்கள் என்றால் சுத்தத்தை அவர்கள் எவ்வளவு மதிக்கிறார்கள்என்பது நமக்குப் புரியவேண்டும்.

இந்தப் பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களிலெல்லாம் வாங்கிய பொருள் திருப்திகரமாக இல்லையென்றால், கஸ்டமர் அதை return பண்ணி பணத்தைத் திருப்பி வாங்கிக்கொள்ள அனுமதிக்கிறார்கள். சண்டை போடுவதில்லை. வேறேதேனும் வாங்கிக்கொள்ளும்படி வற்புறுத்துவதில்லை. அமைதியாகப் பணத்தைத் திருப்பித் தருகின்றார்கள். இப்படி customer satisfactionஐ அவர்கள் பாராட்டுவதால் உண்மையில் அவர்களுக்கு வியாபாரம் அதிகரிக்கின்றது, customer loyalty கிடைக்கிறது.

ஆனால் இங்கே பொருள் திருப்திகரமாக இல்லை என்று சொல்லி replacement கேட்டாலோ, அல்லது refund கேட்டாலோ பெரிய கடைகளில் கூடத் தகராறு செய்கிறார்கள். Billலிலேயே 'Goods once sold will not be taken back' என்று அடித்து கொடுத்துவிடுகிறார்கள். நம் கண்ணோட்டம் பணத்தின் மேலுள்ளது. அவர்கள் கண்ணோட்டம் இலாபத்தைத் தாண்டி customer satisfaction என்ற உயர்ந்த valueவின் மேலுள்ளது. அவர்களுக்கு பிஸினஸ் வேகமாக வளர்கிறது. நம் வளர்ச்சியில் அவ்வளவு வேகமில்லை என்றால் அதில் ஆச்சர்யமில்லை.

அமெரிக்கா நம்மைவிடப் பலமடங்கு dynamism அதிகமுள்ள நாடு. ஜனத்தொகை 30 கோடி என்றால் அங்குள்ள கார்களின் எண்ணிக்கை 22 கோடியாகவுள்ளது. அதாவது 1000 பேருக்கு 765 கார்கள் இருக்கின்றன. நெடுஞ்சாலைகளைப் பார்த்தால் வெறுங் கார்மயமாகவே காட்சியளிக்கின்றன. இவ்வளவு கார்கள் சாலைகளில் இயங்கி கொண்டிருந்தாலும் horn அடிக்காமல் ட்ராபிக் அமைதியாகத்தான்

நகர்கிறது. சென்னை, மும்பை, டெல்லி போன்ற பெருநகரங்களில் traffic noise எவ்வளவு பெரிதாகக் கேட்கும்என்பது உங்களுக்குத் தெரியும். Horn அடிக்காமல் 100 மீட்டர்கூட கார்கள் நகர்வதில்லை.

நம்முடைய பெருநகரங்களில் இரவு 10 மணிவரையிலும்கூட, குடி இருக்குமிடங்களில்கூட வீதியில் சத்தமிருக்கும். ஆனால் அங்கே residential பகுதிகளில் இரவு 7 மணிக்குமேல் அமைதியாகவுள்ளது. ஆன்மீகத்தின் பிறப்பிடமான நம் நாட்டில் இருக்கவேண்டிய அமைதி இயக்கத்திற்கும் movementற்கும் பெயர் வாங்கியுள்ள அமெரிக்காவில் தானுள்ளது. எல்லா இயக்கங்களுக்கும் பிறப்பிடம் silence என்றும், இயக்கத்தில் வெளிப்படும் எனர்ஜியெல்லாம் பின்னிருக்கும் silenceஇல் இருந்துதான் வெளிவருகிறது என்பது பகவானின் கூற்று.

Silence என்ற ஆன்மீகப் பண்பை அமெரிக்கர்கள்தாம் தெரிந்தோ, தெரியாமலோ பின்பற்றிவருகிறார்கள். ஆன்மீகச் சிறப்புக்கொண்ட நம் நாட்டிலோ silenceஇன் அருமை தெரியாமல் நாம்தான் அதைக் கெடுத்துக்கொண்டு, நம்முடைய எனர்ஜி levelஐ குறைத்துக்கொள்கி-றோம். நம்முடைய ஆன்மீகச் சிறப்பிற்கு ஏற்றபடி நம்முடைய வீடுகளிலும் வீதிகளிலும் அலுவலகங்களிலும் ஒரு நல்ல silenceஐக் கொண்டுவந்தால் நம்முடைய எனர்ஜி levelஉம் அதிகரிக்கும், நம் முன்னேற்றமும் விரைவு பெறும்.

**6. மனிதனுடைய அறிவாற்றல்தான் அவனுக்குள்ள மிகச்சிறந்த resource ஆகும். அதை வைத்துக்கொண்டு அவனிடமுள்ள limited resourcesகளை limitless resourcesகளாக மாற்றிக்கொள்ளலாம்.**

நம்முடைய வாழ்க்கை பலவகைகளில் வரம்பிற்குட்பட்டு உள்ளது. நம்முடைய ஆயுளுக்கு ஒரு வரம்புண்டு. நம்முடைய உடல் தெம்பிற்கு வரம்புண்டு. பலபேருடைய வருமானம் ஒரு வரம்பிற்குட்பட்டுள்ளது. வரம்பற்ற வருமானத்தைப் பெரும்பாலோரால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. நமக்குள்ள சுதந்திரம், அதிகாரம் மற்றும் உரிமைகள் என்று எல்லாமே வரம்பிற்குட்பட்டுள்ளன. பூமியின் பரப்பளவிற்கும் ஒரு வரம்பு



உண்டு. பயிரிடுவதற்கு நமக்குக் கிடைத்துள்ள நிலமும், பயன்படுத்து-வதற்குக் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களும் அளவிற்குட்பட்டுத்தான் உள்ளன.

நிலக்கரி மற்றும் எண்ணெய் வளங்களை நாம் வேகமாகப் பயன்-படுத்தி வருவதால் இன்னும் 30 அல்லது 40 ஆண்டுகளில் இவை தீர்ந்துவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. அப்பட்சத்தில் நம்முடைய எனர்ஜி தேவைகளுக்கு என்னசெய்வது என்ற கேள்வி இப்பொழுதே எழுந்துவிட்டது. இப்படிப் பலவகைகளில் நம் வாழ்க்கை வரம்பிற்கு உட்பட்டிருப்பதால் வரம்பற்ற வளர்ச்சி என்பது மனிதனுக்குக் கிடையாதோ என்ற அச்சமும் மனிதனுக்கு எழுந்துள்ளது.

ஆனால் உண்மையில் மனிதனுடைய அறிவாற்றலுக்கு வரம்புகளை மீறும் சக்தி உண்டு. இந்த அறிவாற்றலை வைத்துத்தான் மனிதன் நாகரீக வாழ்க்கையையும் விஞ்ஞான வளர்ச்சியையும் இந்த அளவிற்கு மேம்படுத்தியுள்ளான். எனவே இதே அறிவாற்றலை வைத்துக்கொண்டு தற்பொழுது உள்ள வரம்புகளையும் இயற்கை வளங்களுடைய பற்றாக்-குறையினால் வரும் பிரச்சினைகளையும் மனிதனால் முறியடிக்க முடியும் என்றாகிறது.

ஆதிமனிதன் வேட்டையாடியும் மரங்களில் காய்த்த காய் மற்றும் பழங்களையும்தான் உண்டு வாழ்ந்தான். அவ்வகையில் மனித சமூகத்திற்குக் கிடைத்த உணவு சப்ளை குறைவு. இந்தக் குறைந்த சப்ளையை வைத்துக்கொண்டு ஜனத்தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்க முடியாது. இத்தகைய நெருக்கடி ஏற்பட்டபொழுது மனிதன் தன்னறிவாற்-றலைப் பயன்படுத்தித் தன்னுடைய உணவு சப்ளையைப் பெருக்கிக் கொண்டுள்ளான். ஆடு, மாடு, பன்றி போன்ற விலங்குகளைத் தானே வளர்க்க ஆரம்பித்தான். விதை விதைத்துத் தண்ணீர் விட்டுப் பயிர்களை வளர்க்கக் கற்றுக்கொண்டான். பிராணி வளர்ப்பு மற்றும் விவசாயம் ஆகியவற்றைக் கற்றுக்கொண்டு இவைமூலம் தன்னுடைய உணவு சப்ளையைப் பெருக்கிக்கொண்டுள்ளான்.

கைகளால் வேலை செய்தவன் நாளடைவில் ஆயுதங்களைத் தயாரித்துக்கொண்டான். அடுத்த கட்டமாக மெஷின்களையும் இப்பொழுது தனக்கு உதவியாக வைத்துக்கொண்டுள்ளான். இதனால் மனிதனுடைய உற்பத்தித்திறன் பெருகியுள்ளது. கால்நடையாகப் பயணம் செய்தவன் இன்று கார், விமானம்மூலம் பயணம் செய்யும்பொழுது அவனுடைய வேகம் அதிகரிக்கிறது. டெலிபோனில் பேசும்பொழுது பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்தை நிமிடத்தில் கடக்கிறான். கம்ப்யூட்டரில் informationஐச் சேகரிக்கும்பொழுது 1000 பக்கங்களிலுள்ள தகவலை ஒரு சின்ன hardware driveஇல் சேகரிக்கிறான்.

ஆகவே நம்முடைய அறிவாற்றல் நமக்கு இயற்கை விதிக்கும் வரம்புகளை மீறி நம்முடைய உற்பத்தித் திறனைப் பெருக்கிக்கொள்ள உதவுகிறதுஎன்று தெரிகிறது. இப்படிப்பட்ட அறிவுத் திறனால் விளைகின்ற வரம்பற்ற வளர்ச்சிக்கு அமெரிக்காவே முன்னுதாரணமாகத் திகழ்கிறது. நம் நாட்டின் labour forceஇல் 60% விவசாயத்தில்தான் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அமெரிக்காவில் 2 சதவிதத்திற்கும் குறைவான labour forceதான் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளது. 60% labour force விவசாயத்தில் ஈடுபட்டிருந்தபொழுதும் நம் நாடு உணவு உற்பத்தியில் 1970 வரை தன்னிறைவு பெறவில்லை. ஆனால் ஒரு சதவிதத்திற்கும் குறைவான labour force விவசாயத்தில் ஈடுபட்டிருந்தபொழுதும் அமெரிக்கா தன் தேவைக்குமேல் உற்பத்தி செய்து உணவுப்பொருட்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டே நம்முடைய விவசாய உற்பத்தித் திறனுக்கும் அவர்களுடைய விவசாய உற்பத்தித் திறனுக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாம் உலகப்போரில் தான் ஈடுபட வேண்டிவரும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை. ஆனால் 1941 டிசம்பரில் ஜப்பான் திடீரென்று Pearl harbourஇல் தாக்குதல் நடத்தியபொழுது அமெரிக்கா விழித்துக்கொண்டு தானும் போரில் இறங்கியது. அப்பொழுது அமெரிக்க இராணுவத்தில் 1,30,000 வீரர்கள்தானிருந்தனர். அடுத்தவொரு



வருடத்திற்குள் அந்த வீரர்களின் எண்ணிக்கை 40,00,000 உயர்ந்தது. தன்னுடைய வீரர்களுக்கு ஆயுதம் வழங்கவேண்டிய அவசியம் போக, நேசநாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் சோவியத் யூனியனுக்கும் ஆயுதங்கள், பீரங்கிகள், விமானங்கள், போர்க்கப்பல்கள் என்று எண்ணற்ற கணக்கில் வழங்கவேண்டியிருந்தது. இந்த அபரிமிதமான ஆயுத உற்பத்திக்கு அமெரிக்கா தன்னை வெற்றிகரமாகத் தயார் செய்துகொண்டது. மனிதனுடைய உற்பத்தித் திறனுக்கு வரம்பே இல்லை என்பதற்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு.

வரம்பற்ற வளர்ச்சி என்பது power of infinity physical levelஇல் வெளிப்படுவதாகும். Infinity எண்ணிக்கையில் வரம்பற்ற வளர்ச்சியைக் கொண்டுவருவதுடன் மற்றும் பல வழிகளில் தன்னாற்றலை வெளிப்படுத்-தும். காலத்தையும் இடத்தையும் அளவுகடந்து சுருக்குவது infinityயின் வெளிப்பாடு எதிர்த்திசையில் நிகழ்வதாகும். இரண்டாம் உலகப்போர் நிகழும் சமயத்தில் கப்பலொன்று ரிப்பேராகிப்போனது. சாதாரணமாக அதைச் சரிசெய்ய மூன்று மாதங்களாகும். ஆனால் போர் நெருக்கடியின் காரணமாக அந்த ரிப்பேர் வேலையை விரைவாக முடிக்க விரும்பியவர்-கள் 2 நாட்களில் முடித்தார்கள் என்றால் அதை நம்மால் நம்பமுடிகிறதா? ஆனால் இப்படியொரு சம்பவம் உண்மையில் அந்நாட்டில் நிகழ்ந்தது.

Infinity physical levelஇல் வெளிப்படுவதுபோல உணர்வு லெவலிலும் வெளிப்படும், எண்ணத்திலும் வெளிப்படும். தம்மால் தீர்க்கமுடியாத பிரச்சினை எதுவுமில்லை என்ற மனோபாவம் அமெரிக்கர்களுக்கு நிறைய உண்டு. இந்த எண்ணமும் அதனை நிறைவேற்றுவதில் அவர்கள் வெளிப்படுத்தும் தைரியமும் infinityயின் வெளிப்பாடுகளாகும். சிகாகோ நகரில் தவறுதலாகக் கட்டிடங்களைத் தாழ்ந்த பகுதியில் கட்டியிருந்தார்-கள். பின்பு இக்கட்டிடங்களை எல்லாம் உயர்த்தி மேலே கொண்டுவர வேண்டும் என்று அந்நகரத்தின் முனிசிபாலிட்டி முடிவு செய்தது. ஒரு பெரிய நகரத்திலுள்ள எல்லாத் தாழ்ந்த கட்டிடங்களையும் உயர்த்த வேண்டும் என்றால் அது ஒரு சாதாரண முயற்சியே இல்லை. ஆனால் இப்படியொரு முயற்சியை அவர்கள் மேற்கொண்டார்கள். கட்டிடங்களுக்கு

கீழே எல்லாப் பக்கங்களிலிருந்தும் jackகளை வைத்து உயர்த்தினார்கள். ஓர் 5 மாடி கொண்ட, ஓட்டலாக இயங்கிக்கொண்டிருந்த கட்டிடத்தை அங்கே வேலை நடக்கும்பொழுதே இப்படி jackஐ வைத்து தூக்கினார்கள். அதுவும் உடையாமல், சாயாமல் மேலே 5 அடி எழும்பி வந்தது. இப்படியொரு மாபெரும் முயற்சியை வேறெந்த நாட்டிலும் யாரும் வெற்றிகரமாக எடுத்திருக்க முடியாது. ஆனால் அமெரிக்கர்களுக்கு இது சாத்தியமாகி உள்ளது என்றால் அவர்களுடைய மனோபாவமே இதற்குக் காரணம்.

1980இல் Chrysler என்ற அமெரிக்க கார் கம்பெனி நிர்வாகம் சரியில்லாமல் போனதால் 3 பில்லியன் அளவிற்கு நஷ்டமடைந்தது. 3 பில்லியன் என்றால் 300 கோடி டாலராகும். அன்றைய foreign exchange rateபடி பார்த்தால் ஒரு டாலர் 12 ரூபாய்க்கு சமமாகவிருந்திருக்கும். அப்படியிருந்தால்கூட 3 பில்லியன் டாலர் என்பது 36,000 கோடிக்குச் சமமாகும்.

உலகத்தின் தொழில் சரித்திரத்தில் இப்படியொரு மாபெரும் நஷ்டம் அதுவரையிலும் வந்ததில்லை. இந்த நஷ்டத்திலிருந்து இக்கம்பெனி மீளவே முடியாது என்று எல்லாப் பொருளாதார வல்லுநர்களும் பேசினார்கள். ஆனால் Lee Iacocca என்ற automobile இன்ஜீனியர் அக்கம்பெனிக்கு தலைமைப் பொறுப்பேற்றார். கம்பெனியை நிமிர்த்த முடியுமென்று பேசினார்.

பொறுப்பேற்றவுடன் கம்பெனியின் நிர்வாகத்தையும் செயல்பாடுகளையும் அணுகுமுறைகளையும் சரிசெய்தார். பொறுப்பற்ற, ஒழுங்காக வேலை செய்யாத உயர்நிலை அதிகாரிகள் 32 பேரை பதவிநீக்கம் செய்தார். பெட்ரோல் அதிகம் செலவாகும் இன்ஜின் டிசைனையெல்லாம் மாற்றி fuel efficiency மிக்க புதிய டிசைன் இன்ஜின்களை உருவாக்கும்படி கட்டளையிட்டார். தானே டி.வி. கார் விளம்பரங்களில் கம்பெனியின் சார்பாகத் தோன்றி கம்பெனியின் மாடல்களை விளம்பரப்படுத்தினார். கஸ்டமர்களுக்கு கார் திருப்தியில்லை என்றால் பணத்தை திருப்பிக் கொடுப்பதாக வாக்களித்தார். கம்பெனிக்கும் மார்க்கெட்டிற்கும் தொடர்பு



விட்டுப்போன இடங்களிலெல்லாம் அத்தொடர்பை புதுப்பித்தார். இதன் விளைவாக மூன்றே வருடங்களில் கம்பெனி நிமிர்ந்தது. பழைய நஷ்டத்தை சரிசெய்து அதற்குமேல் 3 பில்லியன் இலாபம் ஈட்டிக்காட்டினார். உலகமே அதிசயித்தது. ஒரு தனிமனிதன் ஒரு பெரிய கார்ப்பரேஷனையே காப்பாற்றிச் சாதனை படைத்தார். Lee Iacoccaவின் செயல்பாட்டிலும் பர்சனாலிட்டியிலும் power of infinity வெளிப்பட்டு முடியாத காரியத்தை முடிந்ததாக்கியது.

Power of infinity என்பது ஓர் ஆன்மீக சக்தியாகும். 2000 வருடங்களுக்கு முன்பே நாமதை உணர்ந்துவிட்டோம். காலப்போக்கில் நாம் கண்டுபிடித்ததையே நாம் மறந்துவிட்டு வறுமை, இயலாமை, பற்றாக்குறை, அடிமைத்தனம் என்று பலவித வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு விட்டோம். நம் நாட்டவருக்கு ஆன்மீக விழிப்பு வந்தால், நாம் அமெரிக்கர்களையும் வளர்ச்சியில் மிஞ்ச முடியுமென்பதுதானுண்மை.

நம் நாட்டின் அண்மைக்காலச் சரித்திரத்திலேயே power of infinity சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. நம் நாட்டிற்கு வன்முறையின்றி 1947இல் சுதந்திரம் கிடைத்தபொழுது அந்தச் சுதந்திர அலை தொடர்ந்து செயல்பட்டு மேலும் 43 ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது. முயன்றால் சாதிக்க முடியும் என்றவிடம் நமக்கும் உண்டு. பஞ்சமும் பட்டினியுமே வாடிக்கையாக இருந்த நாம் 1970இல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றோம். பால் உற்பத்தியில் வெண்மைப்புரட்சி நிகழ்த்த நம் நாடு முயற்சி எடுத்தபொழுது 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகிலேயே பால் உற்பத்தியில் நமக்கு முதலிடம் கிடைத்தது.

நம்முடைய ஜனத்தொகைப் பெருக்கத்தை நாம் பெரிய சுமையாகவும் பாரமாகவும் நினைத்த நாட்களுண்டு. நம்முடைய உற்பத்தித் திறன் குறைவாக இருந்தபொழுது ஜனத்தொகைப் பெருக்கம் பாரமாகவிருந்தது. ஆனால் நம்முடைய உற்பத்தித் திறனை உயர்த்திவிட்டால் இதே ஜனத்தொகை பாரமாகவில்லாமல் பெரிய assetஆக மாறிவிடும். சில வெளிநாட்டு research institutions 2030ல் இந்தியாவும் சீனாவும்

பொருளாதாரத்தில் முன்னணிக்கு வரக்கூடும் என்ற கருத்துக்கணிப்பை வெளியிட்டுள்ளன.

இந்தியா is a sleeping giant என்று வர்ணிக்கப்பட்ட காலம் உண்டு. இப்பொழுது நாம் விழித்துக்கொண்டுவிட்டோம். 2030இல் நாம் உலக அரங்கில் பொருளாதாரத்தில் முன்னணிக்கு உண்மையில் வந்து நின்றோம் என்றால் power of infinityஐ நாம் உண்மையில் வெளிப்படுத்திய-தாக அமையும்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

"பாராமுகமாக இருக்கும் தன்மையை வாழ்வு இழக்க ஆரம்பித்து விட்டது'' என்கிறார் அன்னை. சிறு நல்லகாரியம் பெரும் பலனையும், சிறு தவறுகள் பெரிய விபத்துகளையும் உற்பத்தி செய்கின்றன. முன்னே செல்லாவிட்டால் நாம் உள்ளதை இழக்க நேரிடும் என்று அறிவோம். ஒரு நிலையின் (plane) ஆரம்ப கட்டத்தில் நல்லது, கெட்டது, இடைப்பட்டதுஎன மூன்று பிரிவுகள் இருக்க முடியும். கடைசிக் கட்டத்தில் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ மட்டும் இருக்கலாம். இடைப்பட்ட நிலை என்பதில்லை. திருமணம் செய்து, குடும்பத்தை நடத்தி, சமூகத்தின் பகுதியாக இருக்க வேண்டும். அல்லது ஒதுக்கப்பட வேண்டும். இடைப்பட்ட நிலையில்லை.

✡ ***சிறு நல்லது பெரும்பலன் தரும்.***

✡ ***இனிமேலும் வாழ்வு பார்த்துக்கொண்டிருக்காது.***

✡ ***கடவுளுக்குக் கண்ணில்லையா என்பது இனியில்லை.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**889) நல்லதும் கெட்டதும் தேவை. இரண்டும் சேர்ந்து ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தும். மனிதன் முழுஆனந்தம் பெற அவன் இரு பக்கங்களையும் அனுபவிக்க வேண்டும்.**

***நல்லதை ஏற்பதைப்போல் கெட்டதையும் ஏற்றால் வாழ்வு முழுமை பெற்று ஆனந்த மயமாகும்.***

நாம் நல்லதை ஏற்கிறோம், கெட்டதை விலக்குகிறோம். இது வாழ்வை முழுமையாக அனுபவிக்க உதவாது.

வாழ்வை முழுமையாக அனுபவிக்க, கெட்டதையும் ஏற்க வேண்டும்.

உடலுக்கு உணவு தேவை; ஆனால் வேலையும் தேவை. ஒருவர் உடலை வளர்க்க உணவையும், உரமான வேலையையும் நாட வேண்டும்.

உணவு நல்லது, வேலை கெட்டது என்பது ஒருவர் போடும் கணக்கானால் அவருடல் வலிமையற்று, பெருத்து பூசணிக்காய் போல் வளரும். நோய்வாய்ப்பட்டால் உடலுக்கு தாங்கும் வலிமை இருக்காது. உணவு எந்த அளவுக்கு அவசியமோ அதே அளவு வேலையும் அவசியம்.

வாழ்வில் நல்லதும், கெட்டதும் மொழிக்கு இலக்கியம், இலக்கணம் போலாகும்.

ரிஷிகள் வாழ்வை வெறுத்தனர்; உடலைப் பேண மறுத்தனர்.

அவர்கள் பெற்ற மோட்சம் பெரியது என்றாலும், முழுமை என்ற நோக்குடன் பார்க்கும்பொழுது, அது சரிஎனக் கொள்ள முடியாது; தவறாகும்.

1947இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. 1949இல் சைனாவில்

கம்யூனிஸ்ட்கள் ஆட்சியை நிறுவினர். உலகம் இந்தியாவை ஏற்றது. சுமார் 10 ஆண்டுகள்வரை ஐ.நா. கம்யூனிஸ்ட் சைனாவை ஏற்கவில்லை.

சைனா ஒதுங்கி வாழ்ந்தது.

இந்தியா பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கி வல்லரசுகளுடன் சேராமல் வாழ்ந்ததால் ஆசியத் தலைமையை நேருவும், இந்தியா-வும் பெற்றனர். சைனா ரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டிருந்தது. அதன் இராணுவம் வலிமை பெற்றது. பஞ்சசீலக் கொள்கையாலும் வல்லரசுகளுடன் கூட்டுச் சேர மறுத்ததாலும் இந்தியா இராணு-வத்தைக் கருதவில்லை.

1962இல் சைனா இந்தியாமேல் படை எடுத்தது.

நேருவுக்கு இடி விழுந்தது.

12,000 சதுரமைல் இடத்தைச் சைனா அபகரித்தது.

நல்லதை மட்டும் நாடி கெட்டதை விலக்குவது போல் இந்தியா சமாதானத்தை மட்டும் நாடி, போரை விலக்கியது; இராணுவத்தைப் புறக்கணித்தது.

**க்ஷணத்தில் நிலைமை மாறியது.**

கூட்டு சேராக் கொள்கை கரைந்தது.

அமெரிக்க உதவியை இந்தியா நாடியது.

சைனா பின்வாங்கியது.

**முழுமையை மறுப்பது அறிவுடைமையாகாது; அது மடமை.**

அரசியல், யோகம், வாழ்வு, வியாபாரம், கல்விஎன அனைத்துத் துறைகட்கும் பொதுவான உண்மையிது.

முழுமையை முழுமையாகப் பாராட்ட வேண்டும்.

❀❀❀

**890) ஆண், பெண் வேறுபாட்டை ஜடம் பயன்படுத்துகிறது. உணர்வில் ஆனந்தம் பெற வலியும் சந்தோஷமும் அவசியம். மனதில் ஞானம் வர அறிவும் அறியாமையும் தேவை.**



***உணர்வு வலியை ஏற்பதைப்போல் மனம் அறியாமையை ஏற்க வேண்டும்.***

மனிதன் வளருகிறான்.

உலகம் நாகரீகமடைகிறது.

வாழ்வு வசதி பெறுகிறது.

வளரும் அறிவு வாழ்வை வசதிமயமாக்குகிறது.

இவை உலகில் ஏற்படும் மாற்றங்கள்.

ஜடமும், உணர்வும், அறிவும் இதற்கு வெவ்வேறாகச் செயல்படு-கின்றன.

ஜடம் ஆண், பெண் வேறுபாட்டைப் பயன்படுத்துவதாலும்,

உணர்வு வலியை ஏற்பதாலும்,

மனம் அறியாமையை ஏற்பதாலும்

உலகம் முன்னேறுகிறது.

உலக முன்னேற்றத்தை பகவான் பலவகையாகக் கூறினாலும் ஏழு அஞ்ஞானம், ஏழு ஞானமாக மாறுவதால் நடக்கிறது என்றார்.

**பிரம்மம் ஆனந்தம் தேடி சிருஷ்டியை ஏற்படுத்தியது.**

இதன் போக்கு, தலைகீழானது.

தலைகீழான போக்கே அதிகபட்ச ஆனந்தம் தரும்என்பது தத்துவம்.

அறியாமையை அறிவு நாடும்பொழுது அறிவு ஆனந்தமாகும் என்கிறார்.

நாம் மடையனைக் கண்டு சிரிக்கிறோம், கேலி செய்கிறோம்.

அவனுக்கும் அறிவுண்டுஎன ஏற்றுப் பொறுமையாக அவன் என்ன நினைக்கிறான்எனக் கேட்டால்,

அவனுடைய நோக்கில் அவன் நினைப்பது சரிஎன்று தெரியும். மேலும் அவன் உள்ள இடத்தில் நாமிருந்தால் நாமும் அப்படித் தான் செய்வோம்என்று விளங்கும்.

அந்த அனுபவம் பெறவே அவன் மடையனானான்என்று விளங்கும்.

அதனால் அவன் மடையனில்லை; அவனை மடையன்என நாம் நினைத்தது மடமைஎனத் தோன்றும்.

இந்த மடையன் மனத்தை ஆராய்ந்திராவிட்டால் நமக்கு இந்த ஞானம் உதயமாகியிருக்காதுஎன விளங்கும்.

மடையன் தன் மடமை என்ற தோற்றத்தால் உலகை மடையர்கள் ஆக்குகிறான்என்பது தத்துவம்.

மடையனுக்குப் புரிவதுபோல் செயல்பட்டவர் உலகத்தலைவர்களாக ஆனார்என நாமறிவோம்.

வலியை நாடும் உணர்வு ஆனந்தமாவதும்,

பெண்ணை நாடும் ஆண் ஆனந்தம் பெறுவதும்,

அறியாமையை அறிவாகக் கருதும் மனம் ஆனந்தம் பெறுவதும்

ஸ்ரீ அரவிந்தம் உலகுக்களித்த பரிசுகள்.

பகவானையடைய இவ்வுண்மைகளை நாம் முக்கியமாகக் கருத வேண்டும். இன்று உலகில் ஏழை, பணக்காரன், மடையன், மேதை, தலைவர், தொண்டர், கவி, சிஷ்யன், கணவன், குரு, மனைவி என்பது போன்ற பலதரங்களை உடையதாகும். மனம் நிறைய பெறும் கருத்து காதல் romance என்பது நாம் கவனிக்கத்தக்கது.

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**சதிகாரனை வென்றவனுக்கே சந்தர்ப்பம்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**பவித்திரமான ஆத்மாவினுள் அன்னை வந்தபின் அவன் முயற்சி அன்னைக்குத் தடையாகும். மற்றவர்கட்கு அம்முயற்சி தேவை. அன்னை சக்தியைப் பெற்று அனுபவிப்பதே முயற்சி.**



**"Life Divine" – கருத்து**

**பகுத்தறிவுக்கு விடுமுறையளித்து, திரையைக் கிழித்து மேலே போனால் ஞானம் அரியாசனத்தில் வீற்றிருப்பதைக் காணலாம்.**

Ph.D. படிக்கவேண்டுமானால் மாணவன் தான் என்ன படிக்கப் போகிறோம் என்பதின் சுருக்கத்தை எழுதி விண்ணப்பிக்க வேண்டும். அதைப் பல்கலைக்கழகம் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளும். மாணவனுக்கு உகந்த பேராசிரியரிடம் அனுப்பும். அவனுக்குப் பிரியமானவர் என ஒரு பேராசிரியரிருந்தால் அவரிடம் மாணவனைப் பல்கலைக்கழகம் ஒப்படைக்கும். இது வழக்கம்.

M.B.A. முடித்துப் பல ஆண்டுகள் கழித்து, D.B.A. (Doctor of Business Administration) பட்டத்திற்கு இருவர் சேர்ந்து விண்ணப்பிக்க விரும்பினர். பல்கலைக்கழகம் அவர்களை proposal விண்ணப்பம் தரும்படிக் கேட்டனர். இருவரும் சேர்ந்து Theory of Peace என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தனர். பிறகு அதை Culture of Peace என மாற்றினர். தங்கள் 10 ஆண்டு அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு outline சுருக்கம் எழுதினர். சர்வதேச அரங்கில் அனுபவமுள்ள நண்பரிடம் சுருக்கத்தைக் காட்டி அபிப்பிராயம் கேட்டனர்.

✡ *சுருக்கம் பல புதிய (original) கருத்துகளைக் கூறுவதைக் கண்டு பாராட்டினார்.*

✡ *அதற்கேற்ற உதாரணங்கள் பல கூறினார்.*

✡ *உதாரணங்களைத் தர்க்கமாக மாணவர் மாற்றினர்.*

✡ *சுருக்கம் விவாத முடிவில் விளக்கமாயிற்று.*

✡ *விளக்கம் original புதுக்கருத்துகளைக் கூறுகிறது.*

✡ *புதுக்கருத்துகள் சிருஷ்டித்திறனுடன் அமைந்துள்ளன.*

✡ *D.B.A. என்பது டாக்டர் பட்டமானாலும் அதைக் கடந்த டாக்டர் பட்டம் Ph.D. ஒன்றுண்டு.*

✡ *D.B.A.வுக்காகத் தயாரித்த சுருக்கம் Ph.D.க்குரியதாக அவருக்குத் தோன்றியது.*

“எப்படி இக்கருத்துகள் உங்களுக்குத் தோன்றின” என மாணவர்களை அவர் கேட்டார். “நாங்கள் சிந்திப்பதில்லைஎன முடிவு செய்து, தோன்றியதை எழுத ஆரம்பித்தோம்’’எனப் பதில் வந்தது. பல்கலைக் கழகத்தில் வழக்கமாகக் கேட்பதுபோல் ‘‘யாராவது guide உங்கள் மனதில் இருக்கிறாரா?”எனக் கேட்டனர். அவருக்கு அப்படி எவரும் அதுவரை இல்லை. கடந்த சில மாதங்களில் விமானப் பிரயாணத்தில் தமக்குப் பழக்கமான சீன மாது அவர் கம்பனி முதலாளியை அறிமுகப்படுத்தினார். அவர் பெயர் Fons. மாணவர் “எனக்கு அப்படி எவரும் மனதிலில்லை. சமீபத்தில் Fons அறிமுகமானார். ஒருவேளை அவரை நான் guideஆக ஏற்கலாம்” என்றார். Fons பெயரைக் கேட்ட பேராசிரியர் “Fons அதிக அனுபவமுள்ள பிரபலம் பெற்றவர்’’ என்றார். Fons உலகில் 20ஆம் நிலைக்குரிய expert என மாணவர் கேள்விப்பட்டிருந்தார். சமீபத்தில் வெளியான புத்தகம் ஒன்றில் ‘‘Fons உலகில் 5ஆம் நிலைக்குரிய மானேஜ்மெண்ட் எக்ஸ்பர்ட்” எனக் கூறியது. சிந்தனை அற்றுப்போனால் ஞானம் உதயமாகும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவனின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள சக்தி விழித்தெழுவது முறையான ஒருநிலைப்படுதல் எனலாம்.

***எல்லா சக்தியும் விழிப்பது ஜீவனின் நிஷ்டையாகும்.***



## அன்பர் கடிதம்

ஸ்ரீ அரவிந்த அன்னைக்கு நன்றி கலந்த வணக்கத்தோடு எழுதுவது. சென்ற 17.9.06 மாலை அன்று என் தாயாருக்குத் திடீர் என்று மயக்கமாகவும் நடக்க முடியாமலும் போய்விட்டது. அவர்கள் ஏற்கனவே பி.பி., சர்க்கரை வியாதி உள்ளவர்கள். உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் சென்று காண்பித்துப் பரிசோதனை செய்ததில், மிக அதிகமாக பி.பி.யும் சர்க்கரையும் உள்ளதுஎன்று கூறி சிகிச்சை ஆரம்பித்தார். நான் அன்னையிடம் வேண்டிக்கொண்டேயிருந்தேன். ஒரு மணி நேரம் கழித்து உடல்நிலை ஓரளவிற்கு நார்மலுக்கு வந்தது. அன்னைக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருந்தேன். இரவும் இதே நிலையில் இருந்தார்கள். மருத்துவமனையிலே இருந்தோம். மறுநாள் 18.9.06 காலையிலிருந்து முதலில் இருந்தமாதிரியே பி.பி. ஏற ஆரம்பித்து, கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. மனது மிகவும் வேதனையாகி அன்னையிடம் சமர்ப்பணம் செய்துகொண்டே இருந்தேன். மருத்துவர் “நீங்கள் வேறு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள்” என்று கூறினார். மனது மிக வேதனையோடும் அன்னை மீது நம்பிக்கையோடும் அன்னை நிச்சயமாகத் தாயாரைக் குணமாக்குவார் என்ற நினைவுடனும் சமர்ப்பணம் செய்துகொண்டேன். “அன்னையே, என் அம்மாவை முதலில் எப்படி நடக்க வைத்து நல்லபடியாக அழைத்து வந்தேனோ அதே மாதிரி வீட்டிற்கு திருப்பி அழைத்து செல்ல வேண்டும்” என்று சமர்ப்பணம் செய்து கொண்டேன். மதியம் 1 மணியளவில் KH Apolloவில் அவசரப் பிரிவில் சேர்த்து CT scan பார்த்தபிறகு மூளையில் இரத்தம் உறைந்துள்ளது என்று மருத்துவர்கள் கூறினார்கள். அப்பொழுதும் நான் அன்னையிடம் சமர்ப்பணம் செய்துகொண்டே இருந்தேன். பின்னர் ICUவில் சேர்த்து சிகிச்சை ஆரம்பித்தார்கள். சிறிது சிறிதாக உடல்நிலை நல்லபடியாக முன்னேற்றமாகி கை, கால் அசைக்க ஆரம்பித்தார்கள். அவர்களாகவே சாப்பிடவும், தண்ணீர் குடிக்கவும் முடிந்தது. அன்னைக்கு நன்றி சொன்னேன். சென்ற 27.9.06 மருத்துவமனையிலிருந்து அன்னையின் கருணையால் அவர்களாகவே எப்படி நடந்து வந்தார்களோ அதே மாதிரி வண்டியிலிருந்து இறங்கி, நடந்து வீட்டிற்கு வந்தார்கள். அன்னையின் கருணையை என்னவென்று சொல்வது. “நன்றி அம்மா!

நன்றி அன்னையே!" என்று கூறிச் சமர்ப்பணம் செய்தேன்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

செய்து பார்த்து ஜடம் புரிந்துகொள்வதை மனம் புரிந்துகொள்ள நாளாகும். மனத்தின் அறிவை, உடல் திறனாகப் பெற அதிக நாளாவது போன்றது அது.

***மனம் அறிவதை உடல் செய்ய நாளாகும்.***


**MALARNDHA JIVIYAM**
Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Puducherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name<br>Nationality<br>Address | :<br>:<br>: | **Mrs. Anuradha Sriram,**<br>Indian<br>Integra,<br>51, II cross, Jawahar Nagar,<br>Nellithope Post,<br>Puducherry 605 005. |
| 4. | Publisher's Name<br>Nationality<br>Address | :<br>:<br>: | **Mr. P.V. Balakrishnan,**<br>Indian<br>12, I Cross, Venkata Nagar,<br>Puducherry 605 011. |
| 5. | Editor's Name<br>Nationality<br>Address | :<br>:<br>: | **N. Asokan**<br>Indian<br>5, Puduvai Sivam St.,<br>Venkata Nagar Extn.,<br>Puducherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,**<br>5, Puduvai Sivam St.,<br>Venkata Nagar Extn.,<br>Puducherry 605 011. |

I, (**P.V.Balakrishnan**) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

**sd..................................**
**(P.V. BALAKRISHNAN)**
Date : 01-03-2007 Signature of the Publisher.






# காணிக்கை

வி. ரமேஷ்குமார்

"ஓ!"..... என்று கூச்சல், கைத்தட்டல். பால்கனிக்கு வந்து எட்டிப் பார்த்தேன். நான் இருக்கும் அபார்ட்மெண்டின் சக குடியிருப்பாளர்களின் குழந்தைகள், சிறுவர்கள்.... களிப்புடன் கால்பந்து விளையாடிக்கொண்டு இருந்தார்கள். சில மாதங்களுக்குமுன் கிரிக்கெட்டை இதே கூச்சலுடன் விளையாடினார்கள். எது விளையாடினாலும் உலகக்கோப்பைக்கு விளையாடுவது போன்று அப்படி ஓர் உற்சாகம்..... ஈடுபாடு.... ஆச்சரியப் -படுத்தியது. சின்னஞ்சிறார்களுக்கு எங்கிருந்து வருகிறது இவ்வளவு சக்தி?.... ஆர்வமாக விரும்பிச் செய்தால் எந்த வேலைக்கும் தேவையான எனர்ஜி தானே வந்துவிடுமோ?....

யோசித்துக்கொண்டே ஹாலுக்குள் வந்து அமர்ந்தேன். எனக்குத் தான் எனர்ஜியே இல்லாமல் சோர்வாக இருந்தது. இலக்கில்லாமல் ரிமோட்டைத் தட்டிச் சேனலை மாற்றி, மாற்றிப் பார்த்துக்கொண்டு இருந்தேன். மனம் நாளைய மாதாந்திர ரெவ்யூ மீட்டிங்கை எப்படிக் கையாளப்போகிறேனோ என்று இருந்தது. காரணம், காலையில் ஜி.எம்.க்கும் எனக்கும் நடந்த உரையாடல்.

"மூர்த்தி!.... அந்த stadium rehabilitation வேலைக்கான பில் பாசாகி மூன்று மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது. என்றாலும் இன்னும் chequeஐ வாங்க முடியவில்லை. வழக்கமாக அறுபது நாட்கள் தாமதம் ஆனாலே நம் தலைமை மெமோ கொடுக்கும். நமது கிளைக்கான போனஸ் ஊக்கத்தொகை அனைத்தும் குறையும். என்றாலும் உங்களுடைய கடந்த காலச் சிறப்பான உழைப்பை எண்ணி சென்ற மாதம் அந்த கேள்வி எழுப்பப்படவில்லை. ஆனால் இந்த மாதம் என்னால் தள்ளமுடியாது....

ஏதாவது செய்யுங்கள்....''

''சார்! உங்களுக்கே தெரியும். தேர்தல் அறிவிக்கப்பட்டதால் அனைத்து டெண்டர்களுக்கான பேமெண்டும் நிறுத்தப்பட்டது. தேர்தல் மற்றும் ஆட்சி மாற்றத்தால் தாமதமானது. அதன்பிறகு புதிய செயலாளர் பொறுப்பு ஏற்று இன்னும் சரிவர எதுவும் ஆகவில்லை. நான் என்ன செய்வது?'' என்றேன்.

''இல்லை மூர்த்தி! மூன்று மாதமாக மொத்த அரசே ஸ்தம்பித்து விட்டதா என்ன? எங்கே தவறென்று கண்டுப்பிடியுங்கள்...'' எழுந்தார்.

அவர் சாதாரணமாகத்தான் சொன்னார். ஏனோ அந்த வார்த்தை தைத்தது. 'எங்கே தவறு?' யோசித்துக்கொண்டே இருந்தேன்.

ராஜன் நுழைந்தார். பக்கத்து ஃபிளாட்காரர். எனக்கு அன்னையை அடையாளம் காட்டியவர் என்பதால் மரியாதைக்குரியவர்.

''நீங்கள் திறமைசாலி என்று தெரியும். ஆனால் இந்த அளவுக்கு என்று தெரியாது'' என்று சிரித்தார்.

விழித்தேன்.

''ஏ.சி. ரிமோட்டை வைத்துக்கொண்டு டி.வி.யை பார்த்து அமுக்கிக் கொண்டிருக்கின்றீர்களே, அதுதான்....''

வழிந்தேன்.

''என்ன ஏதாவது பிரச்சினையா?'' ஆதரவாகக் கேட்டார்.

''ஆமாம்!'' ''.........'' சொன்னேன்.

''எனக்குக்கூட ஞாபகம் இருக்கிறது. ஒரு நாள் தியானமையம் சென்று வந்துகொண்டு இருந்தோம். திடீரென்று நீங்கள், ''இப்படி பிரார்த்தனைமூலமே அனைத்தையும் பெற்றுக்கொண்டே இருக்கிறோமே, அன்னைக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? இனி தொழிலில் அன்னை முறைகள் அனைத்தையும் பின்பற்றப்போகிறேன்'' என்றீர்கள். அதன்பிறகுதான் இந்த பிராஜக்ட் வந்தது. இருபது இலட்சம் என்று சொன்னதாக ஞாபகம்....''

''அதேதான்!....'' இழுத்தேன். ''என்னால் முடிந்தவரை எல்லாவற்றையும் அன்னை முறையிலேயே செய்தேன். ஏதோ தவறு நடந்து இருந்தாலும் அன்னை மன்னித்திருக்கக்கூடாதா? தண்டிப்பதுபோல இருக்கிறதே''.

சிரித்தார்.

''அன்னை தண்டிப்பதேயில்லை. தெரியுமல்லவா? ஒரு பேச்சுக்காக



தண்டிப்பதாகவே வைத்துக்கொள்வோம், அன்னை தண்டிக்கும்அளவிற்கு அவரை நீங்கள் நெருங்கியிருக்கிறீர்களா என்ன?''.....

சிரிக்கத்தான் கேட்டார். ஆனால் சுட்டது.

''ஆமாம் அல்லவா? நம்மை நெருங்கியவர்கள், பாதுகாவலர்கள்தானே தண்டிக்க முடியும். அப்படி என்றால் அன்னையை நெருங்கி தண்டனை பெறுவதுகூட ஒரு ஸ்பரிசமல்லவா?''

நான் யோசித்தது அவருக்கும் புரிந்திருக்க வேண்டும்.

''தண்டனை என்று இனி எதையும் சொல்லாதீர். அனைத்தும் அருள்தான். துரதிர்ஷ்டம் என்று நாம் எண்ணியதுதானே நம்மை அன்னையிடம் கொண்டுவந்தது. எங்கே தவறு நடந்தது என்று பார்க்க வேண்டும்''....

''நானும் அதையேதான் யோசிக்கிறேன். எல்லாவற்றையும் நேரம் தவறாமல், தரம் குறையாமல், சரியான கணக்குவழக்கோடு, காண்ட்ராக்டில் போட்டபடி அனைத்தையும் நேர்மையாகச் செய்யுங்கள்'' என்று இன்ஸ்ட்ரக்ஷனே கொடுத்துவிட்டேனே''.

''கொடுத்தீர்கள் சரி, செய்துவிட்டீர்களா?''

''புரியவில்லையே''....

''இதேபோலத்தான், ஆரம்பத்தில் நான் அன்னை முறைகளில் சுத்தத்தையும், தணிவான பேச்சையும் கொண்டுவரவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் யோசித்துப்பார்த்தால் வீட்டை எனக்காக எல்லோரும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும், எல்லோரும் என்னிடம் பொறுமையாக, தணிவாகப் பேசவேண்டும். ஆனால் நான் என்ன செய்தேன் என்று பார்த்தால் துரும்பளவு செய்துவிட்டு என்னால்தான் இந்த வீடு சுத்தம் என்று நினைப்பேன். அதேபோல என்னை ஏன் கத்த வைக்கிறீர்கள் என்பேனேதவிர நான் செய்தது கொஞ்சம்தான். நான் மட்டும்தான் பொறுப்பா, ஏன் எல்லோரும் செய்யக்கூடாதா என்று மனது கேட்டுக்கொண்டே இருக்கும். அதனால்தான் கேட்டேன், உன் இன்ஸ்ட்ரக்ஷனில் உன் பங்கு எவ்வளவு?''

கேள்வி என் அடிப்படையையே அசைத்தது. ''உளமாற நினைத்தேன். அதனைப் பின்பற்றுமாறு ஆணையும் பிறப்பித்தேன். வேறு என்ன செய்ய முடியும்? இனி அது கிளார்க், சூபர்வைசர்கள் வேலை அல்லவா? என்னைப்பொருத்தவரை மனமாற்றம் வந்துவிட்டதல்லவா?'' குழப்பத்துடன்

கேட்டேன்.

“அதேதான்! மனம் நினைத்தவுடன் தான் மாறிவிட்டதாக, செய்து விட்டதாக நினைக்கிறது. அதற்கு எல்லோரும் – அன்னை முதற்கொண்டு – துணை புரியவேண்டும் என்று நினைக்கிறது. நாமெல்லோரும் சுத்தமாக வைத்திருக்கும் அன்னை அறையின் சுத்தம் எத்தனை சதவிகிதம்? அதில் நம் உழைப்பின் பங்கு எவ்வளவு என்று யோசித்தது உண்டா?....”

அவர் பேசிக்கொண்டேபோக..... யோசனை பறந்தது. ஆமாம்! சுத்தத்தை வீட்டில் அனைவரும் செய்ய அதில் குறையை மட்டுமே நான் கண்டுபிடித்தது தெரிந்தது. ஆபீசில் அன்னை முறைகளைப் பற்றி ஒரு ‘பெரிய உரையே’ ஆற்றி இருப்பது தெரிந்தது. என்றாலும் மனது ‘என்மேல் தவறில்லை. நான் ஒருவன் மட்டுமே என்ன செய்யமுடியும்’ என்றே சொன்னது.

“மூர்த்தி! நம் தவற்றை நம் அகந்தை ஒருபோதும் ஒத்துக்கொள்ளாது. அதனால் கேள்வியைத் திருப்பிப்போட்டுப் பார். இதன்மூலம் அன்னை என்ன சொல்ல வந்துள்ளார்கள் என்று யோசி. எதுவுமே நகராதபோது முறைகளை ஜடத்திலிருந்து – உடலிலிருந்து – ஆரம்பிக்க வேண்டும் என்று அன்னை கூறியிருக்கிறார்கள். விட்டுப்போன உன் கடமைகளைச் சரிசெய்ய முடியுமா பார். நாளை வருகிறேன்” என்றவாறே எழுந்தார்.

குழப்பத்துடன் குளித்து, ஊதுவத்தி ஏற்றி அன்னைமுன் அமர்ந்தேன். அலைபாயும் மனதை அடக்க “Peace Mother, Peace Mother” என்று நிதானமாகச் சொல்ல ஆரம்பித்தேன். ஆம், அன்னையிடம் வந்தபிறகு யோகாசனம், சவாசனம், உடல் தளர்ச்சிப் பயிற்சிகள் எதுவும் தேவைப்–படுவதில்லை. “Peace Mother....” என்று சொன்னவுடன் அனைத்தும் அமைதியாவது தெரியும். மெதுவாக.... மெதுவாக.... ஒவ்வொரு நரம்பிலும் அமைதி பரவுவதும், ஒவ்வொரு செல்லிலும் சில்லென்ற உணர்வும், சில சமயம் விரல் நுனிகள் குளிரை உணர்வதும் விவரிக்க இயலாத ஆச்சரியம்.

உள்ளே.... உள்ளே.... சென்று கேட்டேன்: ‘அன்னையே! இதன்மூலம் என்ன சொல்ல வருகின்றீர்கள்?’..... கேட்டதுதான் தாமதம்.... பிரவாகமாக வந்த பதில்கள் முகத்தில் அறைந்தது. தினமும் அனைவருக்கும் அன்னையைப் பற்றிக் கூறுவதாலேயே நான் முழு அன்னை அன்பர்



என்று நினைப்பதும், அதில் ஒன்றைக்கூட பின்பற்ற இயலாததும், இந்த பிராஜக்டிலேயே எத்தனைவிதமான mismanagement – வரவு–செலவு முதல், மனிதவள நிர்வாகம் வரை – செய்ய முடியுமோ அனைத்தையும் செய்திருப்பதும், ‘இதெல்லாம் வியாபாரத்தில் சகஜமப்பா’ என்று ஏற்றுக்கொண்டு இருப்பதும் தெரிந்தது. எங்கே வந்தது இதில் அன்னை முறைகள்? இன்னும்... இன்னும்.... என்னுடைய அத்தனை நெகடிவையும் காட்ட.... காட்ட.... திகைத்தேன்.

சரி, எதுவும் நகரவில்லையென்றால் ஜடத்திலிருந்து – உடலிலிருந்து – ஆரம்பி என்றாரே. எல்லாம் முடிந்துவிட்டது. அடுத்த வாரம் international tournament நடக்கப்போகிறது. இப்போதுபோய் தவற்றை எல்லாம் சரிசெய்கிறேன் என்று எப்படிச் சொல்வது?.... அல்லது ஆபீசில் நடந்துபோனதை எப்படி மாற்றுவது?....

யோசித்தேன். வழி தெரியாமலேயே வேண்ட ஆரம்பித்தேன். “தவறுதான் அன்னையே! மன்னியுங்கள். Chequeஐ பாஸ் செய்து தாருங்கள். காணிக்கையாக..... சொல்லும்போதே மனதுக்குள் மின்னல்... அட! காணிக்கை உடலின் வழிபாடு அல்லவா? உடலுழைப்பின் பாக்கியை காணிக்கை நிறைவு செய்யாதா?”..... பதில் கிடைத்ததுபோல இருந்தது.

உற்சாகத்துடன் ஆரம்பித்தேன். “ஆம் அன்னையே! அதிர்ஷ்டத்திற்கு அடிப்படை உழைப்பு. மனமாற்றத்திற்கான வெளிப்பாடு அதற்கான உழைப்பு. அதை நான் களத்தில் இறங்கி செய்யாதது என் தவறுதான். நடந்த தவறுகளுக்கு நான் responsibility என்பதை மறந்து மற்றவர்களை குறை சொன்னதும் தவறுதான். அதற்கு ஈடாக இந்த பிராஜக்ட்டின்மூலம் எனக்கென வரக்கூடிய போனஸ், இன்சென்டிவ் அனைத்தையும் உங்களுக்கே காணிக்கை ஆக்குகிறேன். இனி என் கடமையில், உழைப்பில் குறை வைக்கமாட்டேன். என்னால் என் கம்பனியும், சக தொழிலாளர்களும் பாதிக்கப்படவேண்டாம். உதவுங்கள் Mother!” உருகி வேண்டினேன்.

நிம்மதி பரவ அப்படியே படுத்தேன். உறக்கத்தைச் சமர்ப்பணம் செய்ய, வெகுநாட்களுக்குப் பிறகு உண்மையான உறக்கம்.

காலை 6 மணி.

செல்போன் ரிங்கியது. ‘இவ்வளவு காலையில் யார்?’ எடுத்துப் பார்த்தேன். விளையாட்டு ஆணையத்தின் ஏ.ஓ. “என்ன சார்! இந்த

நேரத்தில்?" கேட்டேன்.

"உங்கள் cheque தயாராக இருக்கிறது. பத்து மணிக்குள் வாங்கிக் கொள்ளுங்கள். நேற்றைய தேதியில் சீல் வேண்டும்".

''விளையாடாதீர்கள்! நேற்று மதியம்வரை ஃபைல் வரவில்லை என்றீர்களே" சந்தேகத்துடன் கேட்டேன்.

"அதுதான் ஆச்சரியம்! நேற்று திடீரென அமைச்சர் அழைத்தார். இன்று சட்டசபையில் 'cut motion'ஆம். உங்களுக்கு மட்டுமன்று, நிறைய ஒப்பந்தகாரர்களுக்குப் பாக்கி இருப்பது பற்றி எதிர்கட்சிகள் கேள்வி எழுப்ப இருப்பதாகவும், அது மட்டுமல்லாமல் கடந்த வருட budget allotment மீதமானால் இந்த வருட budget provision குறையும் என்பதாலும் அத்தனை பெண்டிங் பில்லையும் பாஸ் செய்ய சொல்லி விட்டார்கள். நேற்று இரவு இரண்டு மணிவரை வேலை பார்த்து முடித்தோம்" அவர் சொல்ல..... சொல்ல....

தலை சுற்றியது.

இப்படியும் நடக்குமா? க்ஷணத்தில் நடப்பது என்பது வார்த்தையன்று... சத்திய வரிகள்.... உண்மையான மனமாற்றம் இவ்வளவு சக்திவாய்ந்ததா? அதைத்தான் அன்னை விரும்புகிறாரா? ஒன்றுமே புரியவில்லையே?.....

ஒன்றுமட்டும் புரிந்தது. ''ஆன்மீக சக்தியை அழைக்கும்முன் உனக்குரிய சக்தியைச் செலவழித்துவிடு" என்றாரே அன்னை. அது முடியாத இடத்தை பவித்திரமான காணிக்கை இட்டு நிரப்பும் என்பதும், அன்னையை நெருங்க நாமறியாத தடைகளை காணிக்கை தகர்க்கும் என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

மீண்டும் பால்கனியில் நின்றேன். காலைத் தென்றலில் மரமல்லிகை-யின் வாசம், நான் திருவுருமாற இருப்பதைக் கட்டியம் கூறுவதுபோல இருந்தது. பக்கத்து பால்கனியில் ஒரு சுட்டிக்குழந்தையின் புன்முறுவலில்... அன்னை!

*முற்றும்*

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# பகவான் ஸ்ரீ அரவிந்தர் சிந்தனைகள்

“என் மனத்திலிருந்த எண்ணங்களை உலகம் நிறைவேற்றத் தவறியதில்லை. காலம் நீடித்திருக்கலாம். ஆனால் தவறு வரவில்லை” என்று பகவான் கூறியுள்ளார். அவற்றுள் தலையானவை இந்திய விடுதலை, ஆசிய விடுதலை, ஐரோப்பிய நாடுகள் இணைந்தது. ‘‘அயர்லாந்திலும், துருக்கியிலும் நான் நினைத்தபடி என்னால் செயல்பட முடிந்தது” எனவும் கூறியுள்ளார். ரஷ்யப் புரட்சியில் தமக்குப் பங்குண்டு என்றார். இமயமலையில் ஒரு தவசி “சுதந்திரத்தைப்” பற்றிக் கனவு கண்டதால் பிரெஞ்சுப் புரட்சி வந்தது என்றார். அது பகவான் ஸ்ரீ அரவிந்தர்எனத் தோன்றுகிறது. பகவானுக்கும், அன்னைக்கும் சித்தியாக வந்தவற்றை அன்பர்கட்கு அவர்கள் அனுபவமாகத் தருகிறார்கள். சித்தி நிலையானது; அனுபவம் ஒரு முறை வருவது. அன்பர்கள் தாங்கள் நினைத்தவை பிற்காலத்தில் பலிப்பதைத் தவறாது கண்டுள்ளார்கள். அந்த அனுபவமில்லாதவரே இல்லை எனலாம். மேடைப்பிரசங்கங்கள், பாட்டு, அரசியல் பதவி, அமெரிக்கா போவது, புத்தகம் எழுதுவது போன்ற பல விஷயங்களை இன்று ஏராளமானபேர் அனுபவிக்கிறார்கள். இருந்தாலும் அது எளிதன்று. அதுபோன்ற வாய்ப்பே அறவே இல்லாதவர் பெரும்பான்மையோர். அதுபோன்ற அன்பர் ஒருவருக்குப் புத்தகம் எழுத ஆவல். அது வாழ்வில் பூர்த்தியாவதில்லை. ஒரு முறை பூர்த்தியாவது பெரிய விஷயம். 60ஆம் வயதைக் கடந்து அவருக்கு அந்த ஆவல் பூர்த்தி ஆயிற்று. ஒன்று இரண்டாகவும், மூன்றாகவுமாகி 8 புத்தகங்கள் பிரசுரம் செய்தார். சில சமயங்களில் “இதெல்லாம் நான் நினைத்ததே இல்லை. இவற்றை நினைக்கவும் எனக்கு சக்தியில்லை. ஆனால் நிறைவேறிற்று” என்பவர் அந்த எண்ணம் ஒரு காலத்தில் ஏற்பட்டு மறந்ததுஎன அறிவதுண்டு. இருக்கும் எளிய உத்தியோகம் நிலையற்றதுஎன பயந்தவருக்கு பெரிய உத்தியோகம் வந்து, அதில் வெகுசீக்கிரம் பிரமோஷன் வந்தது. அமெரிக்காவும் போய் அடுத்த படிப்பையும் தொடர முடிந்தது. இன்றுவரை எப்படி அவை நடந்தன என அவர் நினைத்துப்பார்த்ததில்லை.

❀❀❀

# வயிற்று வலி

அன்பரிடமிருந்து வந்த கடிதத்தை (e-mail) நேரடியாக மொழிபெயர்த்து எழுதுகிறேன்.

“இன்று காலை என் மகளுக்கு வயிற்றுவலி. குழந்தை அழுது படுக்கையில் புரண்டு புரண்டு வேதனைப்பட்டாள். நடந்து வர முடியாது என்பதால் டாக்டரிடம் வர மறுத்தாள். என் சகோதரர் டாக்டர். அவரைக் கேட்கலாமென போன் செய்தேன்; கிடைக்கவில்லை. ½ மணிக்குப்பின் ‘*The Life Divine*’ முதல் அத்தியாயம், முதற் பாரா படிக்க ஆரம்பித்து மகளருகில் உட்கார்ந்தேன். இரண்டு நிமிஷங்களில் அழுகை நின்றது; வலி குறைந்தது. முக்கால்வாசி தேவலாம் என்றாள்.

அதன்பின் காலையிலிருந்து என்ன நடந்ததுஎன யோசனை செய்தேன். வேலைக்காரி வரவில்லை. தன் மகன்மூலம் உடல்நலம் குன்றியதாகவும், காலையில் வேலைக்கு வரமுடியாதுஎனவும் செய்தி சொல்லியனுப்பினாள். உடனே என் மனைவி “அது பொய்” என்றாள். வேண்டுமென்றே லீவு எடுத்துக்கொண்டதாகக் கூறினாள். இது என் மகள் சாவித்திரியின் வயிற்றுவலிக்குக் காரணமாக இருக்கலாம்என நினைத்தேன். என் மனைவியை அவள் மனத்தைச் சோதனை செய்து பார்க்கச் சொன்னேன். என்னையே நான் சோதனை செய்தேன். சில நிமிஷங்களில் சாவித்திரி தூங்கிவிட்டாள். வயிறு வலிக்கவில்லை.

P.S.: நான் மேற்கண்ட e-mailஐ அனுப்பியபின் வேலைக்காரி மாலையில் ஜுரத்துடன் வந்தாள். வேலை செய்வதாகக் கூறினாள். “ஜுரத்துடன் வேலை செய்ய வேண்டாம். போய்ப் படுத்துக்கொள்” என்றாள் என் மனைவி. ‘‘ஏதாவது வேலை செய்கிறேன். துணி வரைக்கும் துவைக்கிறேன்” என்றாள். வேலை செய்பவர்கள் இப்படி நினைப்பதில்லை. அவளை வீட்டிற்கு அனுப்பிவிட்டோம்”.

**நம்மிடமிருந்து வாராமல் நமக்குத் தொந்தரவு வாராது - தாயறியாத சூலுண்டோ!**

வயிற்றுவலியை மருந்தால் குணப்படுத்தினால் அதன் மூல காரணமான குணம் அப்படியே இருப்பதால் மீண்டும், மீண்டும் வரும். மூலத்தை மேற்சொன்னதுபோல் அகற்றினால் மீண்டும் ஆயுள் முடியும்வரை வாராது.

❀❀❀